Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
05 MAY 2004
மாநகர சபை யாழ்ப்பாணம்

இன்றைய அறிமுகம்! நாளைய நாகரிகம்!!
மகாராசி சில்க்ஸ்

சல்வார் கிற
இந்தியன் சாறி வகைகள்
மற்றும் சிறுவர், சிறுமியருக்கான றெடிமேட் ஆடைகள்
அனைத்திற்கும் நாடவேண்டிய இடம்
மகாராசி சில்க்ஸ்
59, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 சித்திரை 23 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.அவ்வல் 14 (05.05.2004) புதன்கிழமை இதழ்:216

## சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து

# தலைமையுடன் ஆலோசனை நடத்தவென அன்ரன் பாலசிங்கம் வன்னி வருகின்றார்!

(லண்டன்)

சமாதான முயற்சிகள் குறித்து தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனுடன் ஆலோசனை நடத்துவதற்காக, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நாளைமறுதினம் வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

தற்போது லண்டனில் தங்கியிருக்கும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், நாளை அங்கிருந்து விமானம் மூலமாக கொழும்புக்குப் புறப்படவுள்ளார்.

துணைவியார் அடேல் பாலசிங்கம் சகிதமாக நாளைமறுநாள் வெள்ளிக்கிழமை கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்துக்கு வரும் அன்ரன் பாலசிங்கம் அங்கிருந்து ஹெலிகொப்ரர் மூலம் வன்னிக்குச் செல்வார்.

வன்னிக்குச் செல்லும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனுடனும், புலிகளின் முக்கிய பிரமுகர்களுடனும் சமாதான முயற்சிகள் குறித்து இவ்வார இறுதியில் விரிவான ஆலோசனைகளை நடத்தவுள்ளார்.

அத்துடன், அடுத்த வாரம் கிளிநொச்சிக்கு வரும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனுடனான சந்திப்பிலும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பங்கேற்கவிருப்பதாகத் தெரியவருகிறது.

சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் கடைசியாக வன்னிக்கு விஜயம் செயதிருந்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம் சுகவீனம் காரணமாக கடநத வருடம் மே மாதம் அவசர சிகிச்சைக்காக லண்டன் திரும்பியிருந்தார்.

வைத்தியர்களின் ஆலோசனைப்படி நீண்ட ஓய்விலிருந்த இவர், கடந்த ஆண்டு மீண்டும் தமது பணிகளைப் பொறுப்பேற்றமை குறிப்பிடத்தக்கது.



## இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில்

# இராணுவ ரீதியாகத் தலையிட்டால் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து!

## எச்சரிக்கின்றார் ஜே.என்.டிக்ஸிற்

(புதுடெல்கி)

## நோர்வே வெளியுறவு அமைச்சர்

# எச்சரிக்கின்றார் ஜே.என்.டிக்ஸிற்



(புதுடெல்கி)

**இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் உதவிகள் மற்றும் தலையீடு என்பன அரசியல் ரீதியானவையாக மட்டுமே இருக்க வேண்டும்.**

**எந்தவொரு இராணுவ ரீதியான தலையீடும் புத்தி சாலித் தனமானதல்ல. அவ்வாறு இராணுவ ரீதியில் தலையிட முற்பட்டால் அது - இந்தியாவின் ஐக்கியத் துக்கும் பிரதேச ஒருமைப்பாட்டுக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ புலிகளின் அச்சுறுத்தலை எதிர் கொள்ள நேரிடும் என்று முன்னாள் இந்தியத் தூது வரும், ஓய்வுபெற்ற இந்திய வெளியுறவுச் செயலருமான ஜே.என்.டிக்ஸிற் எச்சரித்துள்ளார்.**

கடந்த வாரம் புதுடெல்கிக்கு விஜயம் செய்த இலங்கை வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், இலங்கைப் பிரச்சினை யில் இந்தியா நேரடியாகத் தலை யிட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதுகுறித்து செய்தியாளர்களி டம் கருத்து வெளியிட்டபோதே - இந்தியாவின் பிரபல இராஜதந்திரி யும் முன்னாள் வெளியுறவுச் செய லருமான ஜே.என்.டிக்ஸிற் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் அங்கு கருத்துத் தெரிவிக்கையில் -

இலங்கை அரசுக்கும் புலிகளுக் கும் இடையில் மீண்டும் பேச்சுவார்த் தைகளை ஆரம்பித்து - பிரச்சி னைக்குத் தீர்வு காண்பதற்கு இந் தியா உதவ வேண்டும்.

நடுநிலையாகச் செயற்பட்டு புலி கள் மற்றும் தமிழ்மக்கள் இணக் கத்துக்கு வரும் வகையில் தீர்வு காணப்படவேண்டும். ஆனால் அது இலங்கையின் பிரதேச ஒருமைப் பாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் அமையவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை - கதிர்காமரின் இந்த அழைப்புக் குறித்து கருத்து வெளியிட்ட, புதுடெல்கியை மைய மாகக் கொண்ட தென்னாசிய ஆய் வுக் குழுவின் இயக்குனரான எஸ். சந்திரசேகரன் -

பொறுப்புள்ள அயல்நாடு என்ற வகையில் இந்தியா இந்தப் பிரச் சினையை நடுநிலையுடன் தீர்க்க வேண்டும். இந்தியா ஒருபோதும் ஈழம் உருவ்வாவதை விரும்பாது.

கதிர்காமர் இந்தியாவின் நேர டித் தலையீடு தேவையெனக் கோரி யிருப்பது - இலங்கை இராணுவத் தைப் பலப்படுத்தி - அதன்மூலம் புலிகளைத் தீர்வுக்கு இட்டுவருதே யாகும்.

ஆனால், இந்தியாவின் பங் கேற்பு முற்றிலும் அரசியல் ரீதியா னதாகவே அமையவேண்டும். இந் தியா இராணுவத்தை எந்தவகை யிலும் ஈடுபடுத்தக் கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நோர்வே வெளியுறவு அமைச்சர் திங்களன்று கொழும்பு வருகிறார்

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையி லான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக இரண்டு தரப்புக்களுடனும் உயர்மட்ட கலந்து ரையாடல்களை நடத்துவதற்கு நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் கொழும்புக்கு வர வுள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பு வரும் ஜான் பீற்றர்சன் அரசாங்க உயர் மட்டத்துடனும், விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துடனும் கலந்துரையாடிய நோர்வே தூதுக்குழுவினருடன் கலந்துரையாடி, அடுத்தகட்ட நட வடிக்கை குறித்து ஆராய்வார்.

அத்துடன், எதிர்வரும் திங்கட் கிழமை வன்னிக்குச் செல்லவுள்ள பீற்றர்சன் தமிழீழ தேசிய தலைவர் வே.பிரபாகரன் மற்றும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோரை சந்தித்து பேசுவார் எனத் தெரிய வருகிறது.

# நோர்வே சமாதானக்குழுவினரை கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திப்பு!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளை ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கான பேச்சுவார்த்தை களை முன்னெடுக்கவேண்டும்.

அதன் அடிப்படையில் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு தமிழீழ விடுதலைப்புலிகளிடம் வடக்கு - கிழக்கு தன்னாட்சி அதிகாரம் ஒப்படைக்கப்பட வேண்டும் என, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நோர் வேயிடம் வலியுறுத்தியுள்ளது. நோர்வே சமாதானத் தூதுக்குழுவினரைத் தமிழ்த் தேசியக்கூட்டமைபினர் நேற்று பிற்பகல் தூதரகத்தில் வைத்து சந்தித்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

(சி/2489)

EXPOAIR

Your friend in the skies...

# லக்னோ தேர்தல் தொகுதியில் வாஜ்பாய் வெற்றி பெறுவார்!

## இறுதிக் கருத்துக் கணிப்பு தெரிவிப்பு



(டெல்கி)

லக்னோ தொகுதியில் பிரதமர் வாஜ்பாய் அமோக வெற்றிபெறுவார் என்று கருத்துக் கணிப்பில் தெரிய வந்துள்ளது.

பிரதமர் வாஜ்பாய் போட்டியிடும் லக்னோ தொகுதியில் இன்று தேர்தல் நடக்கிறது. இந்தத் தேர்தல் குறித்து 'ஜி நியூஸ்' சார்பில் வாக்காளர்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது.

பிரதமரின் தொகுதியில் பல்வேறு தரப்பைச் சேர்ந்த 446 வாக்காளர்களிடம் இந்தக் கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதில் பாரதீய ஜனதா வேட்பாளராக போட்டியிடும் பிரதமர் வாஜ்பாய் அமோக வெற்றிபெறுவார் என்று தெரியவந்துள்ளது. 54 சதவீதம் பேர் வாஜ்பாய்க்கும், 26 சதவீதம் பேர் காங்கிரஸ் ஆதரவு பெற்ற [illegible]சை வேட்பாளர் ராம்ஜெத்மலானிக்கும் வாக்களிப்போம் என்று தெரிவித்தனர்.

லக்னோ தொகுதியில் யார் வெற்றிபெறுவார்கள் என்ற கேள்விக்கு 72 சதவீத வாக்காளர்கள் வாஜ்பாய் என்று பதிலளித்தனர். 9 சதவீதம் பேர் மட்டுமே ராம்ஜெத்மலானிக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்தனர்.

இலவச சேலை வழங்கியபோது பெண்கள் பலியான சம்பவம் வாக்காளர்களைப் பாதிக்குமா என்பதற்கு 13 சதவீதம் பேர் மட்டுமே ஆம் என்றனர். மீதி 87 சதவீதம் பேர் எதிர்மறையான கருத்தை தெரிவித்தனர்.

# லல்லுப்பிரசாத்தின் தொகுதியில் வாக்குப் பதிவு முறைகேடு குறித்து தேர்தல் அதிகாரிகள் விசாரணை!

(டெல்கி)

பீஹார் மாநில முன்னாள் முதலமைச்சரும், ராஷ்டிரீய ஜனதா தளத் தலைவருமான லல்லு பிரசாத யாதவ், 2 நாடாளுமன்றத் தொகுதிகளில் போட்டியிடுகின்றார்.

சாப்ரா, மாதேபுரா ஆகியவை அந்த இரண்டு தொகுதிகள் ஆகும். இதில் சாப்ரா தொகுதிக்கு, கடந்த 26 ஆம் திகதி வாக்குப் பதிவு முடிந்துவிட்டது. மாதேபுராவிற்கு இன்று தேர்தல் நடக்கிறது.

சாப்ரா தொகுதியில் லல்லுவை எதிர்த்து பாரதீய ஜனதா சார்பில் மத்திய அமைச்சர் ராஜீவ் பிரதாப் ரூடி களத்தில் இறங்குகின்றார். 26 ஆம் திகதி வாக்குப்பதிவில், லல்லுவின் ஆதரவாளர்கள் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டதாகவும், வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றியதாகவும், ரூடி தேர்தல் கமிஷனிடம் புகார் தெரிவித்தார். அங்கு தேர்தலை ரத்துச் செய்யவேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினார்.

ஆனால், லல்லு வாக்குப்பதிவு அமைதியாக நடந்ததாகவும், தேர்தலை ரத்துச்செய்வது, வாக்களித்த மக்களை அவமதிப்பதாகும் என்றும் கூறினார்.

இந்த நிலையில், சாப்ரா தொகுதியில் நடந்ததாகக் கூறப்படும் தேர்தல் வன்முறைகள் குறித்து விசாரிக்க மத்திய தேர்தல் கமிஷன் இரண்டு பேர்கொண்ட விசாரணைக் குழுவை அனுப்பிவைத்தது.

இதில் இடம்பெற்றுள்ள அதிகாரிகள் ஜே.கே.ராவ், ஆனந்தகுமார் ஆகியோர் நேற்றுமுன்தினம் சாப்ரா தொகுதிக்கு சென்றனர். தொகுதியில் பல இடங்களில் தங்களது வாகனங்களை நிறுத்தி பொதுமக்களிடம் தேர்தல் வன்முறைகள் குறித்து நேரில் விசாரித்தனர்.

கங்சால் என்ற இடத்திலுள்ள பொதுமக்கள் தேர்தல் அமைதியாக நடந்ததாகத் தெரிவித்தனர். பர்புரா என்ற இடத்திலுள்ள மக்கள் தேர்தலில் வன்முறை நடந்தது என்றும் லல்லு பிரசாத் யாதவுக்கு சாதகமாக முறைகேடுகள் செய்யப்பட்டது என்றும், புகார் தெரிவித்தனர். சீதாக்கஞ், தும்ரி ஆகிய இடங்களில் தங்களை வாக்களிக்கவிடாமல், பாரதீய ஜனதாக் கட்சியினர் தடுத்தனர் என்று, லல்லுவின் ஆதரவாளர்கள் தேர்தல் விசாரணைக் குழுவினர் சென்ற வாகனங்களை மறித்து வற்புறுத்தினார்கள்.

பின்னர் தேர்தல் விசாரணைக் குழுவை பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளர் அபைராஜ் கிஷோர், சமாஜ்வாதிக் கட்சி வேட்பாளர் பிரசாத் பிரு, பாரதீய ஜனதா வேட்பாளர் ரூடி ஆகியோரும் தனித்தனியே சந்தித்துப் பேசினார்கள். சாப்ரா தொகுதியில் லல்லுவுக்கு ஆதரவாக பெரியளவில் தேர்தல் முறைகேடுகள் நடந்தன. இங்கு தேர்தலை ரத்து செய்துவிட்டு, மீண்டும் புதிதாக தேர்தல் நடத்தவேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

ரூடி நிருபர்களிடம் கூறும்போது, 'தேர்தல் முறைகேடு நடந்ததை நிரூபிக்கும் வகையில் வீடியோ ஆதாரங்களைக் கொடுத்திருக்கிறேன்' என்றார்.

லல்லு பிரசாத்தும் தேர்தல் விசாரணைக்குழுவை சந்தித்துப் பேசினார். பிறகு வெளியே வந்த அவர் நிருபர்களிடம் கூறும்போது, தேர்தல் அமைதியாகவும், சுதந்திரமாகவும் நடந்தது என்றும், வன்முறைகள் நடைபெறவில்லை என்றும், விசாரணைக் குழுவிடம் விளக்கினேன் என்றார். முன்னதாக விமான நிலையத்திலும் விசாரணைக் குழுவைச் சந்தித்து அவர் பேசினார்.

தொகுதி மக்களின் கருத்துக்களையும் வேட்பாளர்களின் புகார்களையும் கேட்டறிந்த விசாரணைக் குழுவினர் பின்னர் டெல்கி புறப்பட்டுச் சென்றனர்.

'அரசியல் கட்சிகளின் புகார்கள், தேர்தல் பார்வையாளர்களின் புகார்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து மத்திய தேர்தல் கமிஷனிடம் அறிக்கை கொடுப்போம்' என்று முன்னதாக அவர்கள் நிருபர்களிடம் தெரிவித்தனர்.

# ஜெயலலிதாவின் அக்கிரமத்தை அடக்கியவர் டி.ஆர்.பாலுதான்!

## வைகோ தெரிவிப்பு

(சென்னை)

ஜெயலலிதாவின் ஆணவத்தை அடக்க சரியான ஆள் டி.ஆர்.பாலு தான், எனவே அவரை 3 லட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற செய்யவேண்டும் என ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ கூறினார்.

தென் சென்னை தி.மு.க வேட்பாளரும் முன்னாள் மத்திய அமைச்சருமான டி.ஆர்.பாலுவுக்கு ஆதரவாக திருவல்லிக்கோணி பகுதியில் பிரசாரம் செய்தார் வைகோ.

வைகோ கூறியதாவது -

கொட்டும் மழை, கொழுத்தும் வெயில் என வானிலை எப்படி இருந்தாலும், எங்களது கூட்டணித் தலைவர்களுக்கு மக்கள் ஏராளமாகத் திரண்டு வந்து ஆதரவு தருகின்றனர்.

இதற்குக் காரணம் ஜெயலலிதா அரசு மீது மக்களுக்கு உள்ள கோபம். இந்தியாவே திரும்பிப் பார்க்கும் தீர்ப்பை தமிழக மக்கள் தரப்போகிறர்கள். மதசார்பின்மையை உயர்த்திப் பிடிப்பதில் நாட்டுக்கே தமிழகம் வழிகாட்டப்போகிறது. நாற்பதிலும் நாங்கள் வெல்லப் போகிறோம்.

அரச ஊழியர்கள், ஆசிரியர்களை பழிவாங்கவில்லை என்று ஜெயலலிதா அறிக்கை விடுக்கிறார். அதிகாலையில் வீடு புகுந்து ஊழியர்களை கைதுசெய்தார்களே, 17 லட்சம் பேரை ஒரே நாளில் பணி இடைநிறுத்தம் செய்து வீட்டுக்கு அனுப்பினார்களே, அதில் 32 பேர் மனம் வெந்து இறந்தார்களே. இதையெல்லாம் ஜெயலலிதா மறந்தாலும் அரச ஊழியர்கள் மறக்கமாட்டார்கள்

என்னைப் பார்த்து, இவர் தமிழக மக்களுக்காகவா சிறைக்குப் போனார், ஈழதமிழ்களுக்காகத்தானே சிறைக்குப்போனார் என்றார் ஜெயலலிதா. நான் ஊரைக் கொள்ளையடித்துவிட்டா சிறைக்குப் போனேன்? கொள்கைக்காகத்தானே சிறை சென்றேன்.

இந்துக்களும், முஸ்லிம்களும் நெருங்கி வாழும் நாடு இந்தியா. இங்கு மதக்கலவரம் வந்தால் எல்லாத் தரப்புக்கும் அழிவுதான்.மேலும் மசூதிகளை இடிப்போம் என்கிறார்கள். இப்படிச் செய்தால் எதிர் விளைவு ஏற்படாதா? ஏன் வம்பை விலை கொடுத்து வாங்குகிறார்கள்.

தர்மபுரியில் மாணவிகளை உயிரோடு பஸ்சில் வைத்துக் கொளுத்தப்படக்காரணமாக இருந்த ஜெயலலிதா, அந்த மாணவிகளுக்காக கல்லூரியில் எழுப்பப்பட்ட நினைவுத் தூபியை அகற்ற உத்தரவிட்டார். அதை மாணவிகள் ஏற்கமறுத்தனர். இதையடுத்து, அதே கல்லூரியில் டாக்டர் பட்டத்தை கேட்டு வாங்கியிருக்கிறார் ஜெயலலிதா. என்ன ஒரு கேவலமான புத்தி?

ராணி மேரி கல்லூரியை இடிக்கத் திட்டமிட்ட ஜெயலலிதாவை அடக்கியவர் டி.ஆர்.பாலு. ஜெயலலிதாவின் ஒவ்வொரு அக்கிரமத்துக்கும் ஆப்பு அடித்தவர் பாலு.

ஜெயலலிதாவை அடக்க பாலு எடுத்த நடவடிக்கைகளை சிறையில் இருந்தபோது பத்திரிகையில் படித்து மகிழ்ந்தவன் நான். மமதை பிடித்தவர்களை அடக்கச் சரியான ஆள் பாலு. அவரை 3 லட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெ[illegible]ச்செய்வோம் எனத் தெரிவித்தா[illegible].

# சோனியா பிரதமராவதை ஜோதி பாசு ஆதரிக்கவில்லை

## இந்திய கம்யூனிஸ்ட் தலைவர் தெரிவிப்பு

சோனியா பிரதமராக ஆதரவு தெரிவிப்போம் என ஜோதிபாசு ஒருபோதும் கூறவில்லை என்று கேரள மாநில இந்திய கம்யூனிஸ்ட் செயலாளர் பினராயி விஜயன் கூறியிருக்கிறார்.

கேரள மாநிலம் கோழிக்கோட்டில் இது பற்றி அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

சோனியாகாந்தி பிரதமர் ஆவதை அவர் வெளிநாட்டுக்காரர் என்று சொல்லி தடுக்கமுடியாது என்றுதான் ஜோதி பாசு தெரிவித்தார்.

சோனியா பிரதமர் ஆவதை ஆதரிப்போம் என்று அவர் ஒருபோதும் சொல்லவில்லை.

இந்தச் செய்தியை பத்திரிகைகள் திரித்து வெளியிட்டுவிட்டன.

காங்கிரஸின் கொள்கைகளை நாங்கள் எப்போதுமே எதிர்த்து வருகின்றோம். அதேநேரம் காங்கிரஸைப் போல் பாரதீய ஜனதாக் கூட்டணி அரசை வெளியேற்றுவதே எங்களது முக்கிய கொள்கையாகும்.

ஜோதி பாசுவின் கருத்தை திரித்து வழங்கியதன் மூலம், கேரளாவில் எங்கள் அணிக்கு பாதிப்பு எதுவும் ஏற்படாது. 20 தொகுதிகளிலும் காங்கிரசை எதிர்ப்பதில் எவ்வித த[illegible] மாற்றமும் இல்லை.

இடதுசாரி கட்சிகளின் அணியே மத்தியில் ஆட்சியைக் கைப்பற்றும். தேர்தலுக்குப் பிறகு பிரதமரைத் தீர்மானிப்போம்.

இவ்வாறு பினராயி விஜயன் கூறினார்.

# இந்தியச் செய்திகள்

### தி.மு.க கூட்டணியை எதிர்த்து டி.ராஜேந்தர் புதிய கட்சி

தி.மு.க. வேட்பாளர்களை எதிர்த்து டி.ராஜேந்தரின் லட்சிய தி.மு.க பிரசாரக் களத்தில் குதிக்கிறது. தி.மு.க வேட்பாளருக்கு எதிராக சூறாவளி பிரசாரத்தில் டி.ராஜேந்தர் ஈடுபடவுள்ளார்.

தி.மு.கவில் ஒதுக்கப்பட்ட டி.ராஜேந்தர் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து பொங்கி எழுந்தார். அனைத்திந்திய லட்சிய தி.மு.க என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை உருவாக்கியுள்ளார். நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க - பா.ஜ.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவிப்பதாகவும் ராஜேந்தர் அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து நேற்று முதல் அவர் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டார். தி.மு.க கூட்டணி வேட்பாளர்கள் போட்டியிடும் தொகுதிகளில் தீவிர பிரசாரம் செய்யவுள்ளார்.

காஞ்சி புரத்தில் நேற்று மாலை 6 மணியளவில் நடைபெற்ற பொதுக கூட்டத்தில் அவர் பேசினார். அப்போது தி.மு.கவிலிருந்து விலகியதற்கான காரணத்தை மக்களிடம் விளக்கியுள்ளார்.

# 3 ஆவது அணிக்கே தனது ஆதரவு என்கிறார் முன்னாள் பிரதமர் வி.பி.சிங்

மூன்றாவது அணிக்கே எனது முதல் ஆதரவு என, முன்னாள் பிரதமர் வி.பி.சிங் கூறினார். டெல்கியில் அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

பாரதீய ஜனதாக் கட்சியை நாடாளுமன்றத் தேர்தலில் வீழ்த்த ஒரே வழி - மூன்றாவது அணிக்கு ஆதரவு அளிப்பதுதான் எனது முதல ஆதரவு மூன்றாவது அணிக்குத்தான்.

எனவே, இடதுசாரி கட்சிகளுக்கும் மதசார்பற்ற ஜனதா தளத்துக்கும்தான் வாக்களிக்கவேண்டும். இவர்கள் களத்தில் இல்லாத தொகுதிகளில் காங்கிரஸுக்கு வாக்களிக்கலாம். மதசார்பற்ற ஜனதா தளத்துக்கு ஆதரவாக கர்நாடகத்தில் பிரசாரம் செய்தேன். இடதுசாரி கட்சிகளுக்காக பிரசாரம் செய்ய கேரளா, மேற்கு வங்காளம் செல்கிறேன்.

இந்த நாட்டுக்கு ஆபத்தான, எதிரான கட்சி பாரதீய ஜனதா. அவர்களால் அமைக்கப்பட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணியும், மக்கள் விரோத ஆட்சிதான். இந்த ஆட்சியையும், கட்சியையும் தேர்தலில் தூக்கி எறியுங்கள்.

குஜராத் மாநிலத்தில் பாரதீய ஜனதாவின் உண்மையான முகம் வெளிப்பட்டிருக்கிறது. நிலையான ஆட்சியை விரும்புகிறோம் என்று கூறும் பாரதீய ஜனதா ஏன் மேற்கு வங்காளத்தில் இடதுசாரி அரசை கவிழ்க்கப் பார்க்கிறது?

மத்தியில் மத சார்பற்ற அரசு அமைய அரசியல் கட்சிகள் பாடுபட வேண்டும். காங்கிரஸ் கட்சி, நிலையான ஆட்சியைத் தரும் என்பது தான் உண்மை.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின்போது பாரதீய ஜனதா தலைவர்கள் எங்கிருந்தார்கள்? நாட்டுக்காக உயிரைக் கொடுக்க வேண்டிய நேரம் வந்தபோது இவர்களைக் காணவில்லை.

சோனியா காந்தி வெளிநாட்டை சேர்ந்தவரா என்பது பற்றி விவாதம் நடத்த நான் தயார். வெளிநாட்டில் பிறந்த ஒருவருக்கு இந்திய குடி உரிமை வழங்கிய பின் அவர் மீது சந்தேகப்படக்கூடாது.

சோனியா காந்தி பற்றி தவறான கருத்தை பரப்பி, பாரதீய ஜனதா சந்தர்ப்பவாத அரசியல் நடத்துகிறது. தங்களுக்கு ஏற்றபடி சட்டத்தை வளைத்துப்போட முயற்சிக்கிறது.

ராகுல் - பிரியங்கா வெளிநாட்டைச் சேர்ந்த பெண்ணுக்கு பிறந்தவர்கள் என்று பாரதீய ஜனதா மூத்த தலைவர் கூறியிருக்கிறார். அப்படியென்றால் நேபாள நாட்டுப் பெண் இந்தியாவில் திருமணம் செய்து கொண்டால் அவர்களது குழந்தைகளை எந்த நாட்டுக்காரர்கள் என்று அழைப்பது?

ராஜஸ்தான் முதலமைச்சர் வசுந்தரா ரஜேயின் தாயார் நேபாளத்தை சேர்ந்தவர் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இவ்வாறு வி.பி.சிங் கூறினார்.

நாகம்ஸ் சுன்னாகம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
டொல்பி ஒலியமைப்புடன்
விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேலு நடித்த
அருள்

(நீல்ஸ்)
ஆசனப் பதிவுகளுக்கு - நாகம்ஸ் பாட்டா-சுன்னாகம்
நாகம்ஸ் சினிமா, யாழ்.பெயின்ற் காடின், முட்டாஸ் கடைச்சந்தி , K.K.S றோட், யாழ்ப்பாணம். (சி-2397)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
சிறிகாந், பூமிகா மற்றும் விவேக் நடித்த
றோஜா கூட்டம்
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.9.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45 (பு.நே.)
Do not Disturp
(சி-2386)

ராஜா யாழ்ப்பாணம்.
இளைய தளபதி விஜய், திரிஷா நடித்த
கில்லி

காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-2387)

# நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிருபிக்க அரசியல் கட்சிகளுடன் பிரதமர் மஹிந்த சந்திப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 18 ஆம் திகதி கூடவுள்ள நாடாளுமன்றத தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு நாம் பல அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வரு கின்றோம். அந்தப் பேச்சுவார்த்தையில் திருப்தி கரமான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால், பிரதி சபாநாயகர் தெரிவு இரகசிய வாக்கெடுப்பாக இல்லா மல் பகிரங்க வாக்கெடுப்பாக நடைபெறவுள்ளது. இதுவே எமக்குப் பிரச்சினையாகவுள்ளது. ஆனால், பெரும் பான்மையை நிரூபிக்கமுடியும் என்ற நம்பிக்கை எமக் குண்டு எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

எதிர்வரும் 18 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது சபாநாயகர் தெரிவு மற்றும் குழுக்களின் தலைவர்கள் தெரிவு இடம்பெறும். இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இதனிடையே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க, ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த சில எம்.பிக்க ளுடன் இரகசிய பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாக நம்பகரமாகத் தெரியவருகிறது. ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தும் பொறுப்பு இரண்டு சிரேஷ்ட அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.



இதேவேளை, சிறுபான்மை கட்சிகளுடனும் சில அமைச்சர் கள் இரகசியப் பேச்சுவார்த்தை நடத்தி வருகின் றனர். பிரதி சபா நாயகர் பதவிக்கு இலங்கை தொழி லாளர் காங்கிரஸ் சார்பில் ஐக்கிய தேசிய முன்ன ணிப் பட்டியலில் போட்டியிட்டு தெரிவான முத்து சிவலிங்கத்தின் பெயரைச் சிபாரிசு செய்ய ஐக்கிய தேசிய முனனணி தீர்மானிததுள்ளது.

அத்துடன், குழுக்களின் தலைவர் பதவியை முஸ் லிம் காங்கிரஸ் பிரதிநிதி ஒருவருக்கு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதால், சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரைப் பிரதி சபாநாயகர் பதவிக்கு ஐக்கிய தேசிய முன்னணி பிரேரித்தால், அந்த வேட்பாளருக்கு ஆதரவு வழங்கப்போவதில்லையென ஜாதிக ஹெல உறுமய திட்டவட்டமாகக் கூறியுள்ளது என்பது குறிப் பிடத்தக்கது.

# நோர்வே தூதரகம் முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்திய ஜே.வி.பி. மௌனம் சாதிப்பதேன்

## கேள்வி எழுப்புகிறார் சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

நோர்வே அரசு - இலங்கையின் இறைமைக்கு பங்கம் விளைவிப்ப தாகவும், உள்விவகாரங்களில் தலையிடுவதாகவும் முன்பு கூறிவந்த ஜே.வி.பி, நாட்டைவிட்டு வெளியேறு மாறு இலங்கைக்கான நோர்வே தூதரகத்தின் முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்திய ஜே.வி.பி, தற்போது மௌனம் சாதிப்பது ஏன் என்று ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க கேள்ளி எழுப்பினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க - சமாதான முயற்சிக ளில் மீண்டும் நோர்வேயை மூன்றாம் தரப்பு ஏற்பாட்டாளராகக் கடமையாற்று வதற்கு அழைத்திருக்கும் நிலை யில், ஆட்சியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. அதற்கு எதிராக ஆர்ப்பாட் டம் செய்யாமல்விட்டது ஏன் எனக் கேள்வி எழுப்பினார்.

உண்மையில் சிறிலங்கா சுதந் திரகட்சி ஆட்சியில் ஒட்டிக்கொண்டு இருந்து - லஞ்சம், ஊழல் உட்பட அரசாங்கத்தின் தவறுகளை அவர் கள் மேல் சுமத்தி, அதில் அரசியல் இலாபம் தேடவே ஜே.வி.பி. முற்படு வதாகவும் சம்பிக்க ரணவக்க குற்றம் சாட்டினார். (01)

# சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டவர் குற்றவாளியாக இனங்காணப்பட்டார்

(கொழும்பு)

இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் பிரித்தானியர் ஒருவர், அந்த நாட்டின் நீதிமன்றத்தால் குற்றவாளியாக இனங்காணப்பட்டார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் இலங்கையில் தங்கியிருந்த பிரைன் மைக்கல்- இணையத்தளம் மூலமாக சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டமை தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டு, அது தொடர்பில் பிரித்தானிய நீதிமன்றத் தில் இலங்கையின் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகளினால் பிரித்தானிய மெற்றோ பொலிடன் பொலிஸார் ஊடாக வழக்குத் தாக்கல் செய்யப் பட்டது.

இது தொடர்பாகவே பிரித்தானியரான மைக்கல் குற்றவாளியாக இனங்காணப்பட்டார். இவரைக் குற்றவாளியாக இனங்காணுவதற்கான ஆவணங்களை இலங்கையின் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் ஹரேந்திர டி சில்வா சமர்ப்பித்திருந்தார். (01)

# சமாதானத்தை முன்னெடுக்க நோர்வேக்கு தகுதியில்லை!

## ஜே.வி.பி. மீண்டும் கூறுகிறது

இலங்கையில் சமாதானத்தை முன்னெடுப்பதற்குரிய தகுதி நோர்வே அரசுக்கு இல்லையென்ற தமது முன் னைய நிலைப்பாட்டில் சற்றேனும மாற்றம் இல்லையென ஜே.வி.பியின் மத்திய குழு உறுப்பினரும், நாடா ளுமன்ற உறுப்பினருமான ராமலிங் கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

அமெரிக்க சார்பு, மேற்குலக சார்பு நிலைப்பட்ட செயற்பாடுகளை முன்னெடுக்கும் அல்லது அவர்க ளின் நிகழ்ச்சி நிரல்களையே நடை முறைப்படுத்தும் நோர்வேயின் உண்மைநிலை உலக நாடுகளுக்கு எப்போதோ அம்பலமாகிவிட்டது.

எனினும், கடந்த 2 வருடங்க ளில் சமாதான முன்னெடுப்புக்கள் இடியப்பச் சிக்கலாக்கப்பட்டுள்ள தால், மேலும் பிரச்சினையை அதிகரிக் காமல், நோர்வே தொடர்பில் தந்தி ரோபாய முறைகளைப் பின்பற்ற வேண்டியிருக்கிறது.

அத்துடன், இலங்கையின் சமா தான முயற்சியில் இந்தியாவை முழுமையாக ஈடுபடுத்தவேண்டும்.

இதேவேளை, இலங்கையின் யுத்த நிறுத்த உடன்பாட்டை மேற் பார்வை செய்வதில் ஆசிய நாடுகளும் ஈடுபடுத்தப்பட்டு, அவர்களின் பிரதி நிதிகளும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் எனவும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ச தெரிவித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (01)

# மக்களின் குறைகளைக் கேட்டறிய காரைதீவில் மக்கள் பணிமனை

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் மக்க ளின் குறைகளைக் கேட்டறிவதற் காக அந்தமாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாளுமன்ற உறுப்பி னர் பத்நாதன் - காரைதீவில் மக்கள் பணிமனை ஒன்றை நேற்றுமுன் தினம் திறந்து வைத்தார்.

அடுத்தவாரம் தம்பிலுவில் பகுதி யிலும் இதே போன்றதொரு மக்கள் பணிமனை திறக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்டத்தில் நீண்ட தூரத்திலி ருந்து வரும் மக்களின் கஷ்டத் தினை தவிர்ப்பதற்காகவே இந்த அலுவலகங்கள் திறக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற அமர்வுகள் இல் லாத நாட்களில் இந்தப் பணிமனை களிலிருந்து மக்கள் தெரிவிக்கும் குறைகளைக் கேட்டு அதனை நிவர் த்தி செய்யவுள்ளதாக நாடாளு மன்ற உறுப்பினர் பத்மநாதன் தெரி வித்தார். (07)

மட்டு -அம்பாறை அபிவிருத்தி குறித்து

# நாடாளுமன்ற உறுப்பினர்களை கௌசல்யன் சந்தித்துப் பேச்சு

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் எதிர்கால அபி விருத்தி குறித்து அந்த மாவட்டங் களின் நாடாளுன்ற உறுப்பினர்களு டன் மட்டு - அம்பாறை அரசியற் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் சந்திப்பொன்றை நடாத்தினார்.

இந்தச் சந்திப்பு கொக்கட்டிச் சோலையிலுள்ள விடுதலைப் புலிக ளின் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் பகல் 12 மணி தொடக் கம் 2 மணிவரை நடைபெற்றது.

இதில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கனகசபை, தங்கேஸ்வரி, ஜெயா னந்தமூர்த்தி ஆகியோரும், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மநாதனும் கலந்துகொண்டனர். ஜோசப் பரராஜசிங்கம் கொழும்பு சென்றமையால் கலந்துரையாடலில் கலந்துகொள்ளவில்லை.

இந்தச் சந்திப்பில் மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டங்களில் எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் விவசாயம் சம்பந்தப்பட்ட திட்டங் கள் தொடர்பாக கலந்துரையாடப் பட்டதாகத் தெரியவருகின்றது.

# பேச்சுக்கள் இலங்கையிலேயே; கதிர்காமரின் கூற்று கேலிக்குரியது!

## ஒஸ்ரின் பெர்னாண்டோ விமர்சனம்

(கொழும்பு)

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப் படுமாயின், அது இலங்கையிலேயே நடைபெறவேண்டுமென வெளிவிவ கார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்கா மர் தெரிவித்த கருத்தை, முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ நிராகரித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

ரணில் விக்கிரமசிங்க மேற் கொண்ட சமாதானப் பேச்சுக்களின் நகர்வுகள் தூரநோக்குடன் இருந் தது. சமாதானப் பேச்சுவார்த்தைகள் இலங்கையில் நடத்தப்பட வேண்டு மாயின், தமிழீழ விடுதலைப் புலிக ளும் அனுசரணை வழங்கும் நோர் வேத்தரப்பும் இணக்கம் தெரிவித் தாகவேண்டும்.

இந்த இரு தரப்பினரின் இணக்க மின்றி சமாதானப் பேச்சுக்கள் இலங் கையில் நடைபெறவேண்டுமென லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தி ருப்பது கேலிக்குரியது என ஒஸ்ரின் பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் டெங்கு நோய்

(மட்டக்களப்பு)

• மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண் ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப்பகுதியில் நோயாளர்க ளின் எண்ணிக்கை கடந்த வருடத்தி லும் பார்க்க அதிரித்துள்ளதாக மாகாண பிரதி சுகாதார சேவைகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் 55 பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் இருவர் உயிரிழந்துள்ளதாக வும் மாகாண பிரதி சுகாதார சேவை கள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# அரசியலமைப்பு அமைச்சின் ஆலோசகராக ஜயம்பதி!

அரசியல் யாப்பு மறுசீராக்கல் அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகராக கலாநிதி ஜயம்பதி விக்கிரம ரட்ணவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்தார்.

இதேவேளை, பேராதனைப் பல் கலைக்கழக அரசியல்பீட விரிவுரை யாளர் கலாநிதி ரஞ்சித் அமரசிங்க ஆலோசகராகவும், கொழும்பு பல்க லைக்கழக பேராசிரியர் லக்சிறி பெர்னாண்டோ - நோர்வே நாட்டின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் சமாதானத் திட்டங்களுக்குப் பணிப் பாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

அரசியல் யாப்பு சீர்திருத்த ஆலோசனைக் குழுவுக்கு லக்ஷ் மன் கதிர்காமர் தலைமை தாங்கு கின்றார். இந்தக் குழுவில் கல்வி மான்கள், ஊடகத்துறை சார்ந்தோர் அங்கம் வகிக்கின்றனர்.

# புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கு ஜே.வி.பி. பூரண ஒத்துழைப்பு வழங்கும்

## திமுத்து பண்டார அபேகோன் தெரிவிப்பு

இந்த நாட்டில் சமாதானம் ஏற் படுவதை நாங்கள் வரவேற்கின் றோம். அதற்கு எங்களின் ஒத்து ழைப்பு என்றும் உண்டு. அதே வேளை, சமாதான நடவடிக்கை ஒரு சாராரை மாத்திரம் திருப்திப்படுத்து வதாக இல்லாமல், நாட்டில் வாழும் சகல இன மக்களினதும் உரிமை களை வழங்குவதாக இருக்க வேண்டும் என கண்டி மாவட்டத்தில் அதிகவிருப்பு வாக்குகள்ளைப் பெற்ற ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் திமுத்து பண்டார அபேகோன் தெரி வித்தார். நாவலப்பட்டி நகரில் அவ ருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில்- எமது கட்சியில் முதன்முதலாக ஒரு உறுப்பினர் மத்திரமே நாடாளுமன்றத் திற்குத் தெரிவானார். ஜே.வி.பியினர் அடிமட்ட மக்களின் தேவைகளை யுணர்ந்து அவர்களின் வாழ்விற்கு உறுதுணையாகவும், மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானதாக வும் இருந்ததன் காரணமாக, இந்த முறை 36 அங்கத்தவர்கள் மக்க ளால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக் குப் புலிகளுடன் பேச்சுவார்த்தை மூலமே தீர்காண முயல்வோம். யுத் தத்தின் மூலம் எந்தநாளும் எந்தப் பிரச்சினையும் தீர்த்ததாக உலக சரித்திரத்தில் பதியப்படவில்லை. இந்த நாட்டு மக்களின் உயிர்களைப் பறித்து, அதன்மூலம் சமாதானம் என் றால் அது மிகவும் கேலிக்கூத்தா னது.

எனவே, ஜனாதிபதியுடன் தீர்வு யோசனையை முன்னெடுத்துச் செல்ல வுள்ளோம். இதற்கான ஏற்பாடுகளை எமது அரசியல் ஆலோசகர்கள் மேற் கொண்டு வருகின்றனர்.

எந்தக் காரணம் கொண்டும் நாடு பிளவுபடுவதை அனுமதியோம். ஐக்கிய தேசிய முன்னணி அரசாங் கத்தை மக்கள் நிராகரித்ததற்கு அந்தக்கட்சி சமாதானம் என்று கூறி நாட்டை பிளவுபடுத்த முயன்றதே காரணமாகும்.

சமாதானம் என்ற பெயரில் அர சாங்கம் சொகுசு வாழ்க்கை நடத்தி, ஏழை மக்களின் வயிற்றில் அடித்த தன் பலனே இன்று ரணில் மௌனி யாகவுள்ளார். நுவரெலியா தொகுதி அறுமுகன். தொண்டமானுக்கும், சந்திரசேகரனுக்குமே உரித்துள்ளது என்று கூறியவர்கள், எங்களிலும் ஒரு உறுப்பினர் நுவரெலியா மாவட் டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதைக்கண்டு ஆச்சரியமடை கிறோம்.

எங்களைச் சிங்கள இனவாதி என்றும், சிறுபான்மையினரைத் துன் புறுத்துபவர்கள் என்றும் தமிழ், முஸ்லிம் மக்கள் வெறுப்படையும் விதத்தில் சிலர் பிரசாரம் செய்வதை வன்மையாகக் கண்டிக்கிறோம் என வும் தெரிவித்தார்.

# இந்திய வீரர்களுக்கு பந்துவீசுவது மிகவும் கடினமானதொரு செயல்

## அவுஸ்ரேலிய வீரர் பிரட்லீ



(கொல்கத்தா)

எதிர்வரும் இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையேயான டெஸ்ட் தொடரை அதிகாரபூர்வமற்ற சர்வதேச சாம்பியன்ஷிப் என்று கூறலாம் என, அவுஸ்ரேலிய அணியின் அதிவேகப்பந்து வீச்சாளரான பிரட்லீ தெரிவித்தார்.

கொல்கத்தாவில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்காக வந்துள்ள பிரட்லீ கூறியதாவது -

"எதிர்வரும் இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையேயான 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை அதிகார பூர்வமற்ற சர்வதேச சாம்பியன்ஷிப் தொடர் என்று அழைக்கலாம்.

இங்கிலாந்து - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையே நடைபெறும் ஆஷஸ் தொடரை விட, இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையேயான தொடர் மிகமுக்கியமான தொடராகும்.

ஆஷஸ் தொடருக்கென பாரம்பரியம், வரலாறு உண்டு. இருப்பினும் கடந்த இரண்டு வருடங்களாக இந்திய அணி மிகச்சிறப்பாக விளையாடி வருகின்றது. கங்கூலியின் தலைமையில் இந்திய அணி மிக அபாரமாக விளையாடி வருகிறது.

ஒருவேளை இந்திய அணி எங்களை நெருங்கிவிட்டார்களோ என்றுகூட எண்ணத்தோன்றுகிறது. சமீபத்திய நிலவரப்படி இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையேயான தொடரை அதிகாரபூர்வமற்ற சர்வதேச சாம்பியன்ஷிப் போட்டி என்று கூட மதிப்பிடலாம்" என்று கூறினார்.

இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசையை வெகுவாகப் பாராட்டிய பிரட்லீ, சர்வதேச கிரிக்கெட்டில் தற்போது இந் திய அணிக்கு பந்துவீசுவது மிகவும் கடினமான விடயம் என்றும் தெரிவித்தார்.

இது குறித்து பிரட்லீ கூறுகையில் -

வி.வி.எஸ்.லக்ஷ்மன், ராகுல் ராவிட், சச்சின்டெண்டுல்கர், ஷேவாக், கங்கூலி அனைவருமே சர்வதேச தரம் மிக்க வீரர்கள். சச்சினுக்குப் பந்துவீசுவது மிக மிகக் கடினம் என்று குறிப்பிட்டுச்சொன்னார்.

சில சமயங்களில் சச்சினின் விக்கெட்டை வீழ்த்தியிருப்பது மிகவும் திருப்தியளிக் கும் விடயம் என்றும் பிரட்லீ தெரிவித்தார்.

"இந்த முறை இந்தியாவுக்கு எதிராக நடைபெறும் டெஸ்ட் தொடரில் சிறப்பாக விளையாடும் முனைப்புடன் இருக்கிறார் பிரட்லீ. இந்தியாவில் இந்திய அணியை வீழ்த்துவது என்பது கடினமான விடயம்.

இந்தியாவில் விளையாடுவது சவா லான விடயமாகும். டெஸ்ட் தொடரில் விளையாட இதுவரை நான் இந்தியா வந்ததில்லை. ஆனால், வரும் ஒக்ரோபர் மாதம் இந்தியா வருவேன் என எதிர்பார்க்கிறேன். இந்த முறை முழுத்தொடரிலும் விளையாடுவேன். அத்துடன் சிறப்பாகவும் விளையாடுவேன் என நம்புகிறேன்.

இந்திய அணியின் துடுப்பாட்டம் வலிமையாக இருந்தாலும் சொந்த மண்ணில் இந்திய அணியை வீழ்த்துவது என்பது சாத்தியமான விடயம்தான். ஏனெனில் கங்கூலியைப்போல் ரிக்கிபொண்டிங்கும் அணியைச் சிறப்பாக வழிநடத்தி வருகின்றார். ஆனால், இது எளிதான விடயம் அல்ல. சர்வதேச அளவில் மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர்களைக்கொண்டதாக இந்தியா உள்ளது.

இந்தியாவில் இருக்கும் ஆடுகளங்கள் சுழற்பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமாக வுள்ளது. இலங்கை அணிக்கு எதிராகப் பெற்ற டெஸ்ட் தொடர் வெற்றியானது எங்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்துள்ளது. இந்தியாவில் விளையாட அவுஸ்ரேலிய வீரர்கள் அனைவரும் மிகவும் ஆவலுடன் இருக்கிறோம்" என்று கூறிய பிரட்லீ இதுவரை 37 டெஸ்ட் போட்டி களில் விளையாடி 139 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

அவுஸ்ரேலிய அணி வரும் ஒக்ரோபர் மாதம் இந்தியா வரத் திட்டமிட்டுள்ளது. கடந்தமுறை அதாவது, 2001 ஆம் ஆண்டு அவுஸ்ரேலிய அணி இந்தியா வந்திருந்த போது பிரட்லீ அவுஸ்ரேலிய அணியில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய - அவுஸ்ரேலிய அணிகள் சிங்கப்பூர் கிரிக்கெட் போட்டியில்

(சிங்கப்பூர்)

இந்திய - அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணிகள் பங்கேற்கும் சம்பியன் போட்டி ஒன்றை நடத்த சிங்கப்பூர் கிரிக்கெட் சங்கம் திட்டமிட்டுள்ளது.

சிங்கப்பூரில் கிரிக்கெட் விளை யாட்டை ஊக்குவிக்கும் முகமாக இந்தப் போட்டியை நடத்த திட்டமிட்டுள்ளதாக, சிங்கப்பூர் கிரிக்கெட் சங்கத் தலைவர் கிரண் தேவ்பாண்டே தெரிவித்தார்.

இந்த வருடத்திலேயே இந்தப் போட்டியை நடத்தும் முனைப்பில் இருப்பதாகவும், இன்னும் இரண்டுமாத காலத்தில் இது குறித்துத் தெளிவான நிலை தெரிந்துவிடும் என்றும் தேவ்பாண்டே தெரிவித்தார்.

எங்களுடைய அட்டவணைக்கு எந்தெந்த அணிகள் பொருத்தமாக இருக்கும் என்பதைப் பற்றி ஆய்வு செய்து வருகின்றோம். அதேசமயம் இந்தியா, அவுஸ்ரேலியா போன்ற பெரிய அணிகளை விளையாட வைக்கும் முயற்சியிலும் இருக்கிறோம் என்றும் தேவ்பாண்டே கூறினார்.

இந்த சம்பியன் போட்டியில் குறைந் தது 4 அணிகளைப் பங்கேற்க வைக்க சிங்கப்பூர் கிரிக்கெட் சங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்தப் போட்டி நடத்தப்படும் விதம் குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

சிங்கப்பூரில் உள்ள மாணவர்களில் சுமார் 3000 இற்கும் மேற்பட்டோர் கிரிக் கெட் விளையாடி வந்தாலும் கால்பந்து, கோல்ப், பட்மின்ரன், டென்னிஸ் ஆகிய விளையாட்டுகளுக்கு அடுத்தபடியாகவே சிங்கப்பூரில் கிரிக்கெட் விளையாட்டு இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் அணிப் பயிற்சியாளராக மியாண்டட் தொடர்ந்து பணியாற்றுவார்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக ஜாவித் மியாண்டட் தொடர்ந்து நீடிப்பதாக உள்ளூர் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவுக்கு எதிராக சமீபத்தில் நடைபெற்ற ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடரில் பாகிஸ்தான் அணி படுதோல்வி அடைந்தது. இதனால் பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் ஜாவித் மியாண்டட்டிற்குப் பதிலாகப் புதிய பயிற்சியாளர் ஒருவர் நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், ஜாவித் மியாண்டட்டிற்குப் பதிலாக தகுந்த புதிய பயிற்சியாளரை நியமிக்கும் முயற்சியில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தோல்வியடைந்துள்ளது.

இதனால், பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளராக மியாண்டட் தொடர்ந்தும் இருப்பார் எனத் தெரியவருகிறது.

பங்களாதேஷ் அணியின் தற்போதைய பயிற்சியாளராக இருக்கும் டேவ் வட் மோர், அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த மைக் கல் ஸ்லேட்டர், பொப் உல்மர் ஆகியோ ரைப் பயிற்சியாளராக நியமிக்க பாகிஸ் தான் கிரிக்கெட்சபை முயற்சிகள் மேற்கொண்டது.

இந்த நிலையில், மியாண்டட்டையே பயிற்சியாளராக நீடிக்க கிரிக்கெட் சபை முடிவுக்கு வந்திருப்பதாக உள்ளூர்ப் பத்திரிகையான 'தி நியூஸ்' செய்தி வெளியிட்டுள்ளது. இதுகுறித்து 'தி நியூஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது -

'ஏறக்குறைய பாகிஸ்தானில் இருக்கும் முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் எல்லோரும் பயிற்சியாளர் பதவியை ஏற்கத் தயாராக இருந்தனர். ஆனால், அயல்நாட்டைச் சேர்ந்த யாரும் முன்வரவில்லை" என்று செய்தி வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் அணியின் பயிற்சியாள ராக நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க் கப்பட்ட வட்மோர் - பங்களாதேஷ் அணி யுடனேயே இருக்க விரும்பியதாகவும், பாகிஸ்தான் அணிக்குப் பயிற்சியாளராகப் பணியாற்ற அவர் விருப்பம் காட்டவில்லை என்றும் பாகிஸ்தான் கிரிக்கெட்சபையின் மூத்த அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்தியாவுக்கெதிரான போட்டியில் படுதோல்வியடைந்ததால், முன்னாள் வீரர்கள், கிரிக்கெட்சபை நிர்வாகிகளின் கடுமையான விமர்சனத்திற்கு மியாண்டட் ஆளாகினார்.

இருப்பினும், இன்ஸமாம் அணித் தலைவராக நீடிப்பார் என்று அறிவித்து இருந்த போதிலும், மியாண்டட் பற்றி முடிவு எதையும் கிரிக்கெட்சபை தெரிவிக்காமல் இருந்தது. இதற்கு மியாண்டட் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

மியாண்டட்டின் பயிற்சியாளர் பதவிக் காலம் அடுத்த ஆண்டுவரை உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் மியாண்டட் தொடர்ந்து பயிற்சியாளராக நீடிப்பார் என்றும், அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த பந்துவீச்சுப் பயிற்சியாளரான டேரில் போஸ்டருக்குப் பாகிஸ்தான் கிரிக் கெட் சபை அழைப்பு விடுத்திருப்பதாகவும் 'தி நியூஸ்' பத்திரிகை செய்திவெளியிட்டுள்ளது.

# விளையாட்டு

## மகளிர் டென்னிஸ் தரவரிசை வீனஸ் வில்லியம்ஸ் முன்னேறுகிறார்



(மியாமி)

மகளிர் டெனிஸ் தரவரிசையில் முதல் பத்து இடங்களுக்குள் இடம்பெறுவதை நோக்கி அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் வேகமாக முன்னேறி வருகிறார்.

போலந்து தலைநகர் வோர்ஷாவில் நடைபெற்ற டெனிஸ் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் மகளிர் டெனிஸ் தரவரிசையில் 2 இடங்கள் முன்னேற்றம் கண்டுள்ளார் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ். இதன்மூலம் முதல் 10 இடங்களுக்குள் மீண்டும் இடம்பெறுவதை நோக்கி வீனஸ் வில்லியம்ஸ் விரைவாக முன்னேறி வருகின்றார்.

இந்த சாம்பியன் பட்டத்தை வென்ற தன் மூலம் 13 ஆவது இடத்தில் இருந்து 11 ஆவது இடத்திற்கு வீனஸ் வில் லியம்ஸ் முன்னேறியுள்ளார். தன்னுடைய சகோதரியான செரீனா வில்லியம்ஸை விட 4 இடங்கள் பின்தங்கிய நிலையில் வீனஸ் வில்லியம்ஸ் உள்ளார்.

இந்தமாதக் கடைசியில் நடைபெற விருக்கும் பிரெஞ்ச் ஓபன் டெனிஸ் போட்டிகளுக்கு முன்னணி வீராங் கனைகள் அனைவரும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மகளிர் தரவரிசையில் பெல்ஜியத்தின் ஜஸ்டின்ஹெனின் 7353 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். பெல்ஜியத்தைச் சேர்ந்த மற்றொரு வீராங்கனையான கிம் கிளிஜஸ்டர்ஸ் 6280 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தில் உள்ளார்.

தரவரிசை வருமாறு -

ஜஸ்டின் ஹெனின் (பெல்ஜியம், 7353 புள்ளிகள்), கிம்கிளிஜஸ்டர்ஸ் (பெல் ஜியம், 6280 புள்ளிகள்), அமெலி மொரேஷ்மோ (பிரான்ஸ் 3167 புள்ளிகள்), லிண்ட்சே டேவண்போர்ட் (அமெரிக்கா 2996 புள்ளிகள்), அனஸ்தாசியா மிங் கினா (ரஷ்யா, 2828 புள்ளிகள்),

நொடி யாபெட்ரோவா (ரஷ்யா 2398 புள்ளிகள்), செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா 2337 புள்ளிகள்), ஜெனீபர் கப்ரி யாட்டி (அமெரிக்கா 2216 புள்ளிகள்), எலினா டெமண்டியேவா (ரஷ்யா 2192 புள்ளிகள்), அய்சுகியாமா (ஜப்பான் 2053 புள்ளிகள்.

## 300 ஓட்டங்களைக் குவிப்பதற்கு டெண்டுல்கர் உதவியாகவிருந்தார்

### ஷேவாக் பேட்டி



பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 300 ஓட்டங்கள் எடுப்பதற்கு டெண்டுல்கர் மிகவும் உதவியாக இருந்தார் என்று ஷேவாக் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியுள்ளதாவது -

முல்தான் டெஸ்ட்டில் நான் 300 ஓட்டங்களை நெருங்கிக்கொண்டிருந்தபோது சற்றுப் பதட்டத்துடன் ஆடினேன். எல்லாப் பந்துகளையும் அடித்து ஆடநினைத்தேன். அப்போது டெண்டுல்கர் என்னிடம் - 300 ஓட்டங்கள் எடுக்க நல்ல வாய்ப்பு உள்ளது. இந்த வாய்ப்பை வீணடித்து விட வேண்டாம். இது மாதிரியான வாய்ப்பு வாழ்நாளில் மீண்டும் கிடைப்பது கடினம். பொறுமையுடன் ஆடுங்கள் என்றார்.

டெண்டுல்கரின் பயனுள்ள ஆலோசனையால் என்னால் 300 ஓட்டங்கள் குவிக்க முடிந்தது. டெண்டுல்கர் எப்போதுமே எனக்கு வழிகாட்டியாவார். அவரது ஆட்ட முறையைப் பின்பற்றியே நான் விளை யாடுகிறேன். 300 ஓட்டங்கள் எடுத்தபோது அவர் என்னை வாழ்த்தியது மிகவும் சந்தோஷத்தை அளித்தது.

ஒருநாள் போட்டியில் என்னுடன் இணைந்து டெண்டுல்கர் தொடக்க வீரராக ஆடுகிறார். தொடக்க வீரருக்கு அவர் பொருத்தமானவர். அத்தோடு டெண்டுல்கர் எனக்குச் சரியான ஆலோசனைகளையும் வழங்குகிறார்.

முல்தான் டெஸ்ட்டில் நான் எடுத்த 309 ஓட்டங்கள் வெற்றிக்கு உதவியாக இருந்தது. வெற்றி பெற்றபின் எனக்கு ஏராளமான வாழ்த்துக்கள் குவிந்தவண்ணம் இருந்தது.

பாகிஸ்தான் பயணத்திற்கு முன்பு இப்படித்தான் ஆடவேண்டும் என்று திட்டமெதையும் வகுக்கவில்லை. அவுஸ்ரேலிய பயணத்தில் சிறப்பாக ஆடி 195 ஓட்டங்கள் எடுத்தேன்.

இதனால், பாகிஸ்தான் பயணத்திலும் நன்றாக ஆடமுடியும் என்ற நம்பிக்கை பொய்யாகவில்லை என அவர் மேலும் கூறினார்.

## பகுதி II

1. a) உரு I ஆனது H அனுவின் முதல் ஐந்து இலத்திரன்களின் சக்திப்படிகளையும் காட்டுகிறது. (n = 1, 2, 3, 4, 5) உரு II ஆனது H அனுவின் காலல் இலத்திரன் நிற மாலையின் மூன்று கோடுகளைக் காட்டுகிறது.




உரு I




உரு II

$A_1, A_2, A_3$ ஆகியன இந்த காலல் நிறமாலையிலுள்ள முதல் மூன்று தொடரினதும் முதலாவது கோடுகளைக் குறிக்கின்றது. ( α கோடுகளை குறிக்கிறது)

(i) உரு II இலுள்ள மூன்று கோடுகளுக்குரிய இலத்திரன் தாண்டல்களை காட்டுவதற்கு மூன்று அம்புக்குறிகளை உரு (i) இலுள்ள சக்திப்படிகளுக்கிடையே வரைக.

(ii) இந்த அம்புக்குறிகளை பொருத்தமான விதத்தில் $A_1$, $A_2$, $A_3$ என தெளிவாக உரு I இல் பெயரிடுக.

(iii) பின்வரும் வாக்கியத்திலுள்ள அடைப்புக்குள் இருக்கும் பொருத்தமற்ற சொல்லை வெட்டி விடுக?

நிறமாலைக்கோடுகளின் மீடிறன்கள் $A_1$ இலிருந்து $A_3$ வரை ( அதிகரிக்கின்றன / குறைகின்றன)

b. (i) L, M ஆகியன ஆவர்த்தன அட்டவணையில் ஒரே கூட்டத்திலுள்ள அடுத்தடுத்து வரும் ஆவர்த்தனங்களின் இரண்டு P - தொகுப்பு மூலகங்களாகும். L, M இன் அனு எண் 20 இலும் குறைவு. L,M இரண்டினதும் எளிய குளோரைட்டுகளில் M இனது மட்டும் நீர்ப்பகுப்படையும்.

L,M ஆகியவற்றை இனங்கண்டு பெயரை எழுதுக?

L என்பது ..................................................,

M என்பது ..................................................

(ii) M இன் குளோரைட் நீர்ப்பகுப்படைந்து இரண்டு அமிலங்களை தருகிறது. நீர்பகுப்பின் விளை பொருட்களை பெயர் ரீதியில் இனங்கண்டு கீழே எழுதுக.

..................................................

..................................................

இரசாயனக்குறியீட்டைப்பயன்படுத்தி M ன் குளோரைட்டின் நீர்ப்பகுப்புத்தாக்கத்தை சமன்படுத்திய சமன்பாடாகத் தருக?

..................................................

L, M இணைந்த சேர்வை ஒன்று இருப்பின் அதன் இரசாயனச் சூத்திரத்தையும் பெயரையும் தருக? இல்லாவிடின் 'இல்லை' என பதிலளிக்க.

..................................................

c. கீழே காட்டப்பட்டுள்ள கட்டமைப்புகளிலுள்ள இரண்டு வகை S அணுக்களும் a, b என பெயரிடப்பட்டுள்ளன. இரண்டு வகை P அணுக்களும் a, b என பெயரிடப்பட்டுள்ளன. ஒவ்வொன்றினதும் ஒட்சியேற்ற எண், வலுவளவு என்பனவற்றை கீழே உள்ள பொருத்தமான பெட்டிகளில் வெவ்வேறாக எழுதுக.




| அணு | ஒ.ஏ.எ | வ.வு |
|---|---|---|
| $S_a$ | | |
| $S_b$ | | |

| அணு | ஒ.ஏ.எ | வ.வு |
|---|---|---|
| $P_a$ | | |
| $P_b$ | | |

2. a) $Mn^{2+}$ உப்பு ஒன்றை $ClO_4^-$ அயன் அமில ஊடகத்தில் வெப்பமேற்றிய போது செவ்வூதாநிறக்கரைசல் ஒன்று உண்டாகியது. அத்துடன் $ClO_4^-$ ஆனது $Cl^-$ ஆக மாற்றமடைந்தது.

(i) பொருத்தான சமப்படுத்திய அயன் அரைத்தாக்கங்களை எழுதுக.

..................................................

..................................................

(ii) $Mn^{2+}$, $ClO_4^-$ இற்கிடையிலான சமப்படுத்திய அயன் தாக்கத்தை கீழே எழுதுக

..................................................

b) $2NaHCO_{3(s)} \xrightarrow{\Delta} Na_2CO_{3(s)} + CO_{2(g)} + H_2O_{(g)}$

என்ற சமன்பாட்டுக்கமைய சோடியமிரு காபனேற் ஆனது வெப்பமேற்றிய போது சோடியம் காபனேற்றாக மாறியது. 3.36g தூய $NaHCO_{3(s)}$ முழுமை பெறாத வெப்பப்பிரிகையால் 3.05g tளை பொருளை கொடுத்தது. விளைபொருள் $Na_2CO_3$ ஐயும் பிரிகையடையாத $NaHCO_3$ ஐயும் கொண்டிருக்கும். இவ்விளை பொருளில் தோன்றிய $Na_2CO_3$ இன் திணிவை கணிக்க? ( Na = 23, H = 1, C = 12, O = 16 )

( இரு தசம தானத்திற்கு திருத்தமாக கணிக்கவும்)

..................................................

..................................................

..................................................

..................................................

c) A, B ஆகியன முற்றாகக்கலக்குந்தகவுள்ள ஆவிப்பறப்புள்ள இலட்சிய துவிதக்கரைசலை (AB) உண்டாக்கும் திரவங்களாகும். $X_A$, $X_B$ கரைசலில் A, B ன் மூல்பின்னம். $P_A$ ஆவியில் A ன் பகுதி ஆவி அமுக்கம். $P_B$ ஆவியின B ன் பகுதி ஆவி அமுக்கம். $P_{AB}$ கரைசலின் மொத்த ஆவியமுக்கம். R, S ஆகியவையும் முற்றாகக்கலக்குந்தகவுள்ள ஆவிப்பறப்புள்ள துவிதக் கரைசலை (RS) உண்டாக்கும். $X_R$, $X_S$ கரைசலில் R, S இன் மூல்பின்னம். R மூலக்கூறுகளுக்கும், S மூலக்கூறுகளுக்கும் இடையேயுள்ள கவரச்சிவிசைகள் தனியே R மூலக்கூறுகளுக்கிடையிலும், தனியே S மூலக்கூறுகளுக்கிடையிலும், உள்ள கவரச்சி விசைகளிலும் கணிசமான அளவில் குறைவாகும். R, S இன் பகுதி ஆவி அமுக்கங்கள் முறையே $P_R$, $P_S$ ஆகும். போது இக்கரைசலின மொத்த ஆவியமுக்கம் $P_{RS}$ ஆகும்.

(நாளை தொடரும்...)

K.சிவத்திரன் B.sc (Hons) ஆசிரியர் யா/இந்துமகளிர் கல்லூரி

இங்கே மடிக்கவும்





# மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

**அழகிய வண்ணாத்திப்பூச்சி இனிமையான தேனை உறிஞ்சிக் குடித்தது.**

1) இதில் உள்ள எழுவாய் அடைமொழி
1. இனிமையான 2. தேனை 3. அழகிய 4. குடித்தது.

2) மேலே உள்ள வசனத்தில் பயனிலை அடைமொழி யாது?
1. குடித்து 2. தேனை 3 உறிஞ்சிக் 4. அழகிய

3) சங்கீதா இனிமையாகப் பாடினாள். இதில் உள்ள வினைச்சொல் யாது?
1. சங்கீதா 2. பாடினாள் 3. இனிமையாக

**சரியாக எழுதப்பட்டுள்ள சொல்லின் கீழ் கீறிடுக**

4) 1 ஈற்கு 2. ஈர்க்கு 3. ஈக்கு 4. ஈறுர்கு

5) 1. சவர்க்காரம் 2. சவுக்காரம் 3. சவர்காரம் 4. சவற்காரம்

**சரியான விடையின் கீழ் கோடிடுக**

6) கண்ணில்லாத நிலத்தின் கீழ் வாழும் விலங்கு
1. பூச்சி 2. மண்புழு 3. அட்டை 4. வண்டு

7) வயலில் அரிவு வெட்டுவதற்குப் பயன்படும் கருவி
1. முள்ளுக்கத்தி 2. அரிவாள் 3. கத்தி 4. கலப்பை

8) இலங்கையின் இயற்கைத் துறைமுகம்
1. காலி 2. கொழும்பு 3. திருகோணமலை 4. காங்கேசன்துறை

9) மின்னைக் கடத்தும் பொருட்களில் ஒன்று
1. இறப்பர் 2. கண்ணாடி 3. பலகை 4. செப்பு

10) இலங்கையில் நிலப்பரப்பில் சிறிய மாவட்டம் யாது?
1. கொழும்பு 2. களுத்துறை 3. யாழ்ப்பாணம் 4. கண்டி

11)



இவ்வுருவின்படி C யின் பரப்பளவு B யின் பரப்பளவைப்போல் எத்தனை மடங்காகும்.
1. 7 மடங்கு 2. 6 மடங்கு 3. 4 மடங்கு 4. 3 மடங்கு

**பொருத்தமான விடையை எழுதுக**

12)



இவ்வுரு காட்டும் செவ்வகத்தின் நீளம் அகலத்தைப்போல் இருமடங்காகும். அதன்படி செவ்வகத்தின் அகலம் யாது?

..............................

13)


இவ்வுருவின் நிழற்றிய பகுதி முழு உருவின் என்ன பின்னமாகும்.
1. $\frac{5}{7}$ 2. $\frac{2}{7}$ 3. $\frac{2}{3}$ 4. $\frac{2}{8}$




ஒரு வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 25 ஆகும். வாரத்தின் ஐந்து நாட்கள் விளையாடச்சென்ற மாணவர்களின் எண்ணிக்கையை பின்வரும் வரைபு காட்டுகிறது. அதன்படி பின்வரும் வினாவிற்கு விடை தருக.

மேலேயுள்ள வரைபின்படி பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| | நாள் | திங்கள் | ........ | புதன் | ........ | ........ |
|---|---|---|---|---|---|---|
| 14) 15) | சமூகமளித்த மாணவர்களின் எண்ணிக்கை | 10 | ........ | ........ | ........ | ........ |

16) உரு A யிலுள்ள தராசினைப் பாருங்கள். அதில் இருபக்கங்களிலும் வைக்கப்பட்டுள்ள நிறைகள் சமனானவையாகும்.




இதற்கேற்ப உரு B இலுள்ள இரு பக்கங்களிலும் நிறையைச் சமன் செய்வதற்கு நிறை குறைந்த பக்கத்திற்குச் சேர்க்கப்படவேண்டியதைத் தெரிவு செய்து கோடிடுக.



1. 2. 3.

17) வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவுசெய்து கோடிடுக.





1 2 3

**பின்வருவனவற்றிற்குப் பொருத்தமான விடையின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

18) உயரமான கட்டடத்தின் மேல்மாடிக்கு இலகுவில் செல்லப் பயன்படும் சாதனம் எது?
1. படி 2. மின்உயர்த்தி 3. கப்பி 4. கம்பி (............)

19) சைக்கிள் விளக்கிற்கு மின்சக்தியை வழங்கும் உபகரணம் எது?
1. டைனமோ 2. மின்சுருள் 3. மின்உயர்த்தி (...........)

20) மனிதனுக்கு இருகைகள் உண்டு கை கொடுத்தல் என்பது
1. வழிசெய்தல் 2. வரவேற்றல் 3. உதவிசெய்தல் 4. கைகுலுக்கல் (...........)

21) தாயின் மறைவைத் தாங்கமுடியாத பிள்ளைகள் உண்ணாமல், குடிக்காமல் பல நாட்களாக அழுதுபுரண்டனர்.
1. இறப்பை 2. நோய் 3. பிறப்பை 4. வேதனையை (...........)

22) தாவரத்திற்கு வித்துப்போல பறவைக்கு
1. குஞ்சு 2. முட்டை 3. கூடு 4. குட்டி (...........)

**இலக்கம் 23 - 24 வரையுள்ள படங்களில் ஒன்று வித்தியாசமானது. அதனைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.**

23)




1 2 3 4

24)




1 2 3 4

**இலக்கம் 25 இல் உள்ள படங்களுக்குரிய பெயர்களை அதன் படத்தின் கீழ் எழுதுக.**

25)



**பின்வரும் படத்தில் போட்டிகளுக்குப் பயன்படுத்தாத மிருகம் எது? அதன் கீழ் கோடிடுக.**

26)



1........ 2........ 3........ 4........

**பொருத்தமற்ற சொல்லின் கீழ் கீறிடுக.**

27) ஆமை, மீன், முதலை, தவளை.

28) பயறு, பூசனி, பாகல், குறிஞ்சா.

29) பாம்பு, அட்டை, நத்தை, புழு.

30) கானகம், காடு, ஆகாயம், வனம்.

**பின்வரும் வினாக்களுக்கு உரிய சொற்கள் அடைப்புக்குறிக்குள் உள்ளன. அவற்றை சரியான இடங்களில் வைத்து நிரப்புக.**

(வானொலி, ஒலிவ், ஓணான், நேர்கோட்டில், கொலாஜ், பாம்பு)

31) ஒளி ................ செல்லும் ஒரு ஊடகமாகும்.

32) மக்களுக்கு தகவல் ஊடகமாக ................ விளங்குகிறது.

33) பல்வேறு நிறக்கடதாசிகளைக் கிழித்து ஒட்டுவதன் மூலம் செய்வது ................ ஆக்கம் எனப்படும்.

34) சமாதானத்திற்குப் பயன்படும் ................ இலை ஆகும்.

35) சூழலுக்கேற்ப தன் நிறத்தை மாற்றும் பிராணி .......... ஆகும்.

36) வட்டம் என்னும் சொல்  எனவும்



பக்கம் என்னும் சொல் எனவும்

**உருக்களைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளன. மருந்து என்னும் சொல்லைச் சரியாக எழுதக்கூடிய விதத்தைத் தெரிவுசெய்க.**

1 

2 

3 

37) துறவி + 426 எனின் விறது = .......... ஆகும். வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க?
1. 246 2. 624 3. 462 4. 642

38) 6 இருபத்தைந்து சத நாணயங்களைக் கொடுத்து 9 பத்து சத நாணயங்களும் மிகுதி ஐந்து சத நாணயங்களுமாக வாங்கினேன். நான் வாங்கிய ஐந்து சத நாணயங்கள் எத்தனை?
1. 13 2. 12 3. 80 4. 65

**சரியான விடையின் கீழ் கீறிடுக.**

40. பெருங்காற்றினால் மரங்கள் (படபட, கடகட, கிடுகிடு) என்று முறிந்தன.

**T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்**

இங்கே மடிக்கவும்



# க.பொ.த (உ/த) இரசாயனவியல் 2004 ஏப்ரல்

*(நேற்றைய தொடர்ச்சி...)*

50) கூற்று I : Mg(ii) அயன்கள் அடங்கிய நீர்க்கரைசல் ஒன்றுக்கு $NH_4Cl$ ck; $(NH_4)_2CO_3$ உம் சேர்க்கப்பட்டபோது வீழ்படிவு பெறப்படவில்லை
கூற்று II : $NH_4Cl_{(aq)}$ இல் $MgCO_3$ கரையும்

51) சேர்வைகள் A, B, C ஆகியவற்றுடன் தனித்தனியே தொலனின் சோதனைப்பொருள் சேர்த்ததில் பின்வரும் அவதானிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன.
A ஆனது வெண் வீழ்படிவை உண்டாக்கியது
B ஆனது வெள்ளி ஆடியை உண்டாக்கியது
C ஆனது வீழ்படிவையோ, வெள்ளி ஆடியையோ உண்டாக்கவில்லை
கீழ்வரும் சேர்வைக்கூட்டங்களில் எது மேற்படி அவதானிப்புகளுடன் இணங்குகிறது.




52) சோடாச்சுண்ணாம்புடன் வெப்பமேற்றிய பின் ர்டீச சேர்த்த போது புடை ஏலைட்டையும் பின் மிகை $NH_3$ உடன் தாக்கி முதல் அமீனையும் X எனும் சேர்வை கொடுத்தது பின்வருவனவற்றுள் எது X ஆக இருக்கும்?

(1) $CH_3-CH=CH-COOH$

(2) $CH_3-C(CH_3)_2-COOH_3$

(3) $CH_3-C(CH_3)=CH-COOHa$

(4) $CH_2=C(CH_3)-CHOONH_4$

(5) $CH_3-C(CH_3)=C(CH_3)-CONH_2$

53) கார ஊடகத்தில் $CH_3-CH(CH_3)-CHO$ எனும் சேர்வை ஒடுங்கல் அடைந்து கிடைக்கும் விளை பொருளின் கட்டமைப்பு ஆனது

(1) $CH_3-CH(CH_3)=C(HO_3)(CH_3)-CH_3$

(2) $CH_3-CH(CH_3)=CH(HO)-C(CH_3)(CH_3)-CH_3$

(3) $CH_3-CH(CH_3)-CH(HO)-C(CH_3)(CH_3)-CH_3$

(4) $CH_3-CH(CH_3)-CH_2-CH(OH)(CH_3)-CHO$

(5) $CH_3-C(CH_3)(CH_3)-CH(OH)-C(CH_3)(H)-CHO$

54) பின்வரும் கரைசல்களில் எது இரவோல்றின் விதியில் இருந்து எதிர் விலகலை காட்டும் (D = துத்தேரியம்)
1) தொலுயீனில் பென்சீன் 2) எதனோலில் பென்சீன்
3) நீரில் எதனோல் 4) $H_2O$ ;y; DCl
5) $H_2O$ ;y; $D_2O$

55) 25°C இலும் 750 mm Hg அமுக்கத்திலும் நீரின் கீழ்நோக்கிய இடப்பெயர்ச்சி மூலம் 250உம³ ஒட்சிசன் சேகரிக்கப்பட்டது. இவ்வாறு சேரிக்கப்பட்ட ஒட்சிசன் 25°C இலும் 750 mm Hg அமுக்கத்திலும் உலர்த்தப்படுமாயின் அதன் கனவளவு எவ்வளவாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்?
1) $244cm^3$ 2) $250\ cm^3$ 3) $256\ cm^3$
4) $266\ cm^3$ 5) $276\ cm^3$

56) 25°C இல் நீரில் $10^{-3} mol\ dm^{-3}$ ஆகுமாறு யேயூர் கரைக்கப்பட்டு பின் $10^4$ மடங்கு ஐதாகுமாறு தூய நீர் சேர்க்கப்படின் இப்புதிய கரைசலில் $P^H$ பெறுமானம் எண்ணவாக இருக்கும்?
$(25°C ;y; K_w = 1.0 \times 10^{-14} mol^2 dm^{-6})$
1) 11 2) 3 3) 7 4) 9 5) 5

57) ஐந்து காட்டிகளின் நிறமாற்ற இடைகளுக்கான $P^H$ வீச்சுகள் கீழே தரப்பட்டுள்ளன. HCl ,d; 1.0 mol $dm^{-3}$ கரைசலுடன் NaOH இன் 1.0 mol $dm^{-3}$ கரைசலின் 25.0$cm^3$ ஐ நியமிப்புச் செய்வதற்கு இந்தக்காட்டிகளில் எது மிகவும் தகுதியானது?

| காட்டி | $P^H$ வீச்சு |
|---|---|
| 1) மெதைல் செம்மஞ்சள் | 2.9 - 4.6 |
| 2) கொன்கோ சிவப்பு | 3.0 - 5. 0 |
| 3) புரோமோ தைமோல் நீலம் | 6.0 - 7.6 |
| 4) பினோத்தலீன் | 8.3 - 10 .0 |
| 5) தைமோல்த்தலீன் | 9.3 - 10.5 |

58) $CuSO_4$ உம் $ZnSO_4$ உம் மூல்விகிதம் 1:2 ஆகுமாறு அடங்கிய கரைசல் ஒன்றினுள் $CuSO_4$, Mg மூல் விகிதம் 1: 1 ஆகுமாறு Mg நாடாத் துண்டொன்று அமிழ்தப்படும் போது மிகச்சாத்தியமாக நிகழக்கூடியது எது?
1) கரைசலில் $MgSO_4$ காணப்படும்
2) கரைசலில் $MgSO_4$ உம் $ZnSO_4$ உம் காணப்படும்
3) கரைசலில் $MgSO_4$, $ZnSO_4$, $CuSO_4$ மூன்றும் காணப்படும்
4) கரைசலில் $MgSO_4$ உம் $CuSO_4$ உம் காணப்படும்
5) உலோகமாக Cu ck; Zn உம் காணப்படும்

59) KCl, KBr, NaBr திண்மங்களின் அயனிடைத்தூரங்கள் முறையே $3.14A^0$, $3.28\ A^0$ $3.20A^0$ ஆகும். $Cl^-$ இன் அயனாரை $1.81A^0$ ஆயின் $Na^+$ இன் அயனாரை அண்ணளவாக?
1) 1.25யு⁰ 2) 1.33யு⁰ 3) 1.95யு⁰
4) 1.84யு⁰ 5) 1.90யு⁰

60) Fe இன் அரிப்பு சம்பந்தமான கற்றலில் மாணவரொருவரால் ஆய்வு கூடத்தில் பின்வரும் பரிசோதனை அமைப்புக்கள் தயாரிக்கப்பட்டன. இதில் எந்த அமைப்பில் குந ஆணி மிக அதிகமாக அரிப்புக்குள்ளாகும். (உருக்களில் $NaCl_{(aq)}$ உம் சர்வசமமான மின்கலங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மற்றைய மின்வாய் காரீயமாகும்)



## நிதி உதவியாளர் இடமாற்றம்.

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் நிதி உதவியாளராகக் கடமைபுரிந்துவந்த சி.இராஜகுரு - கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை, யாழ்.மாவட்ட செயலகத்தில் கடமைபுரிந்து வந்த வி.சீவரத்தினம் - வடமராட்சி கிழக்குப் பிரதேச செலயகத்தின் நிதி உதவியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (122)

## பொங்கல் விழா

(ஏழாலை)

ஏழாலை முடிமன்னர் ஆலய வருடாந்த பொங்கல் இன்று இரவு மடைப்பண்ட ஊர்வலத்துடன் ஆரம்பமாகி, மறுநாள் வியாழக்கிழமை காலை 10 மணியள வில் பொங்கள் பூசையுடன் அன்னதானமும் நடைபெறவுள்ளது.

## தற்காலிக குடிசைகள் அமைக்க நிதி ஒதுக்கீடு

(தென்மராட்சி)

தென்மர்ராட்சிப் பகுதியிலுள்ள மறவன்புலோ, கைதடி, நாவற்குழிப் பகுதிகளில் அண்மையில் மீளக் குடியமர்ந்த 84 குடும்பங்களுக்கு உடனடியாகத் தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

25 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்தத் தற்காலிக கொட்டகைகள் அமைப்பதற்கென, முதற்கட்டமாக ஒருலட்சம் ரூபாவை தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு யாழ். மாவட்டச் செயலகத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது. (24)

## பிரதேச செயலக அலுவலர்கள் இடமாற்றம்.

தென்மராட்சிப் ப்ரதேச செயகத்தில் ஓய்வூதியப் பகுதியில் கடமையாற்றிய ஜி.சந்திரமாலிகா - கோப்பாய் பிரதேச செய லகத்திற்கும், கோப்பாய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய திருமதி ரி.சூரியகுமாரன்- தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கும் ஒத்துமாறல் அடிப்படையில் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

இதேவேளை, தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய சி.ஜெயசங்கர் மருதங்கேணி உதவி அரச அதிபர் அலுவலகத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார்: இந்த இடமாற்றங்கள் அனைத்தும் கடந்த முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளன. (24)

## நியாப் நன்னீர் திட்டத்தின் கீழ் கோப்பையன் கிராய்குளம் புனரமைப்பு

(தென்மராட்சி)

நாவற்குழி கிழக்கு, நாவற்குழி மேற்கு, கைதடி தெற்கு, ஆகிய மூன்று கிராமசேவகர் பிரிவுகளில் அமைந்துள்ள கோப்பையன் கிராய் குளம் நன்னீர் நோக்கமாக புனரமைக்கப்படவுள்ளது.

6500 அடி நீளமான இந்தக் குளக் கட்டை புனரமைப்பு செய்வ தற்கு 22 லட்சம் ரூபா ஒதுக்கப்படவுள்ளதாகவும், இந்த வாரமே புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் நாவற்குழி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் செ.குமாரசாமி தெரிவித்தார்.

# காலத்தின் தேவைகளை கவிஞர் வீரா கவிதைகளில் தொட்டுக்காட்டியுள்ளார்

## புதுவை இரத்தினதுரை தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

நாம் கிடைக்கப்போகின்ற நாட்டை எவ்வாறு உருவாக்குவது என்று சிந்திக்கிறோமே தவிர, இருக்கிற நாடு எவ்வாறு போகப்போகின்றது என எவரும் சிந்திப்பது இல்லை என தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெற்ற கவிஞர் வீராவின் முதலாவது ஒலிக் கவிதை மற்றும் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாறறுகையில் -

கவிஞர் வீராவின் கவிதைகளைக் கேட்கும்போது ஒரு நல்ல பாடலாசிரியரின் பாடல்களைக் கேட்கும் மனப்பக்குவம் ஏற்படுகின்றது. இவருடைய கவிதைகளில் அநேகமானவை பாடல்தன்மை கொண்டவையாக அமைந்துள்ளன. ஆனால், நம்மிடையே பாடல் சார்ந்த கவிதைகளை எழுதுவோர் அருகியே வருகின்றனர். பலபேர் திறமையான பாடலாசிரியர்களாக இருந்துள்ளனர். ஆனால், அவர்கள் சிறந்த கவிதை ஆசிரியர்களாக இருக்கவில்லை. நல்லவன், உழுந்தூர்பேட்டை சண்முகம போன்றோர் தலைசிறந்த சினிமாப் பாடலாசிரியர்களாக இருந்தபோதும், அவர்கள் ஒரு கவிதை கூட எழுதவில்லை. ஆனால், கவிஞர் வீராவுடைய கவிதைகளைப் படிக்கும் போது இவர் இருதளத்திலும் கால் பதித்துள்ளமை தெளிவாகத் தெரிகின்றது.

வீராவின் கவிதைத் தொகுதியில் முதலாவது கவிதையாகிய உலகத் தமிழன், இதயப்பூவில் வாசஞ்செய்யும் மகரந்தமும், உணர்வுத் தலைவன் நீதான், எங்கள் வாழ்க்கைப் பிரபந்தம் என்ற கவிதை இசைக்கக் கூடிய தன்மையைப் பெற்றிருப்பதைச் சுட்டிக்காட்டலாம்.

இப்பொழுது பல புதிய தொழிலநுட்பங்கள் வளர்ந்துள்ளன. இலக்கியங்கள், புதிய தொழில்நுட்பங்களுககுள்ளே சென்று வெளியேவரவேணடும். வீரா, தான் ஒரு சிறந்த கவிஞன் என்பதைக் இந்தத் கவிதைத் தொகுதியூடாக வெளிப்படுத்தியுள்ளார்.

கவிதை என்றால் என்ன என்பது இன்றுவரை அடிமுடி தேடிய கதையாகவே உள்ளது. கவிதைகள் ஒவ்வொன்றும் காலத்தின் தேவைகளை வெளிக்கொணருகின்றன. வீரா தனது கவி தைகள்மூலம் காலத்தின் ஒவ்வொரு தேவைகளையும் தொட்டுக்காட்டியுள்ளார். வீராவினுடைய கவிதைகள் நிறையச் சொல்லத் தொடங்கி, சில விடயங்களை தொணடைக்குள்ளே முடித்துவிட்டதாகவே நான் கருதுகின்றேன்.

இவருடைய கவிதைகள் காதலையும் தொட்டுச்செல்கின்றன. போராளிகளுக்கு என்ன காதல்? என நீங்கள் எண்ணக்கூடும். போராளிகளுக்குள்ளும் காதலர்கள் இருந்துள்ளார்கள். கரும்புலிகள் காதலித்த வரலாறு எமக்குள் உண்டு. இருவரும் காதலை துச்சமென்று மதித்து, இருவேறு சம்பவங் களால் உயிரிழந்தார்கள். வீராவின் காதல் கவிதைகள் களத்துமேட்டுக் காதலில் ஆரம்பிக்கப்படுகின்றது.

முல்லைச் சமரில் அவள் ஒரு தடவை பார்த்தாள். சத்திய வில் சண்டையில் கண்களால் பேசிக் கொண்டார்கள். எரிமலை முன்னேற்றம் சண்டையில்லை என்றாலும் சந்தித்தார்கள். ஜெயசிக்குறு பலமான தொடர்சமர். எறிகணை மழையிலும் இடையிடையே புன்சிரிப்புக்கள் பரிமாற்றம்... எனத் தொடங்கும் கவிதை - முகாமுக்குத் திரும்பியதும் முதல் வேலையாக அமைப்புக்கு அறிவிக்கிறார்கள். காதலராகப் பங்கேற்ற முதற்சமர் தீச்சுவாலை. சண்டையும், காதலும் வெற்றி பெற்ற இன்பந்தான். இப்பொழுது சமாதானம் எல்லோருக்கும் மகிழ்ச்சி. அரசியல் பணிகளுக்காக அவன் யாழ்ப்பாணத்திற்கும், அதேபணிக்காக அவள் திருமலைக்கும் மாற்றப்பட்டனர். ஆனால், அவர்கள் மட்டும் சந்திக்கமுடியவில்லை. என முடிகின்றது வீராவின் களத்து மேட்டுக்காதல்.

இவரது கவிதையைப் பட்டியல்படுத்தினால் - இவர்கள் போராடிய களங்கள் தெரியவரும். போராளிகளது காதல் களங்கள் வித்தியாசமானவை.

ஒருபுறம் நாம் இத்தகைய வெளியீடுகளில் நாட்டம் காட்டும்போது, எமது இளஞ்சமூகமோ தறிகெட்டு ஓடுகின்றது. இனறைய பத்திரிகைகளிலே வெட்டி ஒட்டபபட்ட செய்தி ஒன்று பார்த்திருப்பீர்கள். உண்மையில் நாம் மனவருந்தவேண்டிய விடயம். இது எமக்குக் கிடைத்துள்ளசாபம். சமூகம் எங்கு செல்கின்றது. எமக்கு முன்னே எமது எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது. பல போராளிகள், பட்டதாரிகள், கலைஞர்கள் என உருவாகும்போது - மறுபுறம் இப்படியும் நடக்கின்றது. நாம் தேசியம் பற்றிப் பேசுகின்றோம், உருவாக்கப்படவுள்ள நாட்டைப் பற்றிச் சிந்திக்கின்றோம், இருக்கிறநாடு எப்படிப் போகின்றது என்பது பற்றிச் சிந்திப்பதில்லை என அவர் தனதுரையில் மேலும் தெரிவித்தார்.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### முதலாவது அகவையில்



பெயர் : பு.விதுஷனா
முகவரி : மலையாளந்தோட்டம், கொற்றாவத்தை.

### இரண்டாவது அகவையில்



பெயர் : ச.கம்ஷிகா
முகவரி : பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------
முகவரி :------------------
பிறந்த ஆண்டு:------------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றோர் ஒப்பம்

# பளை, முகமாலை பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை

(தென்மராட்சி)

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களான பளை, முகமாலை ஆகிய பகுதிகளுக்கு சுன்னாகம் மின்விநியோக நிலையத்திலிருந்து விரைவில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இந்தப் பகுதியில் மின்கம்பங்கள் அமைக்கும் பணிகள் மின்சார சபை ஊழியர்களால் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

.இதேவேளை, ஏ-9 நெடுஞ்சாலையிலுள்ள சோதனைச் சாவடிக்கும் மின்சாரம் வழங்கப்படவுள்ளதால், ஏ-9 வீதி 24 மணிநேரமும் மக்கள் பயன்படுத்த வாய்ப்புக்கள் ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் பளை. முகமாலை, ஆகிய பகுதிகளிலுள்ள அரச நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள், அந்தப் பிரதேசத்தில் வாழும் குடும்பங்கள் அனைத்துக்கும் மின்சாரம் வழங்கப்படவுள்ளதாக மின்சாரசபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (122)

# திலீபன் மருத்துவமனையின் 2 ஆம் ஆண்டு நிறைவு விழா

## 16 ஆம் திகதி நடைபெறும்

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்கு ஆழியவளை திலீபன் மருத்துவமனையின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா - எதிர்வரும் 16 ஆம் திகதி சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

அன்றைய தினம் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தியாக தீபம் திலீபன் மருத்துவமனையும் வைபவ ரீதியாக திறந்துவைக்கப்படவுள்ளது.

தற்போது தனியார் வீடு ஒன்றிலேயே இந்த மருத்துவமனை இயங்கிவருகின்றது.

புதிய மருத்துவமனை அமைப்பதற்குப் புலம் பெயர்ந்த மக்களும், தமிழர் புனாவாழ்வுக் கழகமும் நிதியுதவி செய்துள்ளன.

இந்த நிகழ்வின்போது மருத்துவமனையில் முதலுதவிப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாக -

மருத்துவமனைப் பொறுப்பாளர் ஈழவாணன் தெரிவித்தாக தெரிவிக்கப்படகிறது. (122)

# அமெரிக்க மருத்துவக் குழு கொழும்புக்கு திரும்பியது!

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒருவார காலமாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து யாழ். போதனா வைத்தியசாலையில் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சையை மேற்கொண்டுவந்த அமெரிக்க இராணுவ மருத்துவக் குழுவினர், தமது பணிகளை முடித்துக் கொண்டு நேற்றுமுன்தினம் கொழும்பு திரும்பினர்.

இவர்கள் 57 பேருக்கு பிளாஸரிக் சத்திரசிகிச்சை செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, அமெரிக்க இராணுவ மருத்துவக் குழுவினர் தமது சிகிச்சைகளுக்குப் பயன்படுத்திய நவீன சத்திரசிகிச்சை உபகரணங்களை- இலங்கை இராணுவ வாகனங்களில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

இந்த மருத்துவ உபகரணங்களைத் தாம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்யவுள்ளதாகக் கடந்த வாரம் அமெரிக்க இராணுவ மருத்துவக் குழுத் தலைவர் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## செம்மணி வீதியோரத்தில்

# கொட்டப்படும் கழிவுகளிலிருந்து துர்நாற்றம் வீசுகின்றது!

செம்மணி இந்து மயானத்திற்கும், நாயன்மார்கட்டுப் பகுதிக்கும் இடைப்பட்ட செம்மணி வீதியின் ஓரமாகக் கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவதால் போக்குவரத்துச் செய்ய முடியாதளவுக்கு துர்நாற்றம் வீசுகின்றது.

பழுதடைந்த வாகனங்களின் உதிரிப்பாகங்கள் மற்றும் கழிவுப் பொருட்களும் பெருமளவில் இங்கு கொட்டப்படுகின்றது. மாநகரசபை எல்லைக்கு வெளியே, அதாவது மாநகரசபை எல்லை அடையாளக் கல்லுக்கு மிக அண்மையில் இந்தச் செயல் நடைபெறுகின்றது.

இந்தச் செயலை தடுத்து நிறுத்தி இங்கு கொட்டப்படும் கழிவுப்பொருட்களை தென்மராட்சி பகுதிகளில் யுத்தத்தால் எற்பட்ட பாரிய குழிகளை நிரப்புவதற்கு பயனபடுத்தினால் நன்மையாக இருக்கும் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# மின்சாரம் தாக்கி வயோதிபர் பலி!

(நெல்லியடி)

கரவெட்டிப் பகுதியில் காற்றினால் அறுந்து வீழ்ந்த மின்கம்பியில் சிக்கிய முதியவர் ஒருவர், மின்சாரம் தாக்கி பரிதாபகரமாக மரணமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை ஐந்து மணியளவில் நெல்லியடி மக்கள் வங்கிக்கு முன்பாகவுள்ள ஒழுங்கையில் இடம் பெற்றது. இந்தச் சம்பவத்தின் போது, பொன். கந்தையா வீதி, கரவெட்டி நெல்லியடியைச் சேர்ந்த 72 வயதான முருகேசு இளையதம்பி என்பவரே மரணமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மரணமடைந்த வயோதிபர், கரவெட்டியிலுள்ள தனது மூத்த மகனின் வீட்டிலிருந்து நேற்றுமுன் தினம் அதிகாலை புறப்பட்டு தனது வீட்டுக்குச் சென்றபோது, வழியில் இரவு பெய்த மழையின் காரணமாக மரங்கள் முறிந்து மின்கம்பியின் மீது வீழ்ந்ததால், வீதியில் அறுந்து கிடந்த மின்கம்பியில் சிக்கி மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

சம்பவ இடத்துக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் அரியநாயகம் சென்று பார்வையிட்டார். மரணமடைந்தவரின் சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில், வைத்திய பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (12)

அரசியல் கட்டுரை

க. ஐங்கரன்

# கருணாவும் - இந்திய ஊடகங்களும் துரோகத்தனத்தின் மையங்கள்!

**கிழக்கு மாகாணத்தை வடக்கிலிருந்து பிரித்து தனித்தனி அலகுகளாக பிரித்தாள தமிழ் விரோத சக்திகளும், அந்நிய சக்திகளும் பலதடவை திட்டமிட்டன. இலங்கை அரசாங்கம் மிக நீண்டகாலத் துக்கு முன்பே பல குடியேற்றத் திட்டங்களை மேற்கொண்டு தமிழரின் தாயகப் பிரதேசத்தைத் துண்டுபோட முயன்றது. கல்லோயா, வெலிஓயா என சிங்கள அரசுகளால் அந்நிய சக்திகளின் ஆலோச னையுடன் முன் வைக்கப்பட்ட திட்டங்கள் முழுமை யாக செயற்படாமல் முறிந்து போயின.**

இந்திய - பாகிஸ்தான் கிரிக்கெட் ஆட்டம் மிகச்சுவாரசியமாக இருந்திருக்கும். எமது நாட்டு கிரிக்கெட் ரசிகர்களுக்கு, பாகிஸ்தானை விட இந்தியா வெற்றிபெற வேண்டும் என்பதில் விருப்பும், பின்னர் மனமகிழ்வும் கொண்டிருந்தனர். உண்மையில் நீங்கள் விளையாட்டை ரசித்தீர்கள். விளையாட்டு வீரனை மதித்தீர்கள். எங்கள் அரசியலோடு நீங்கள் எவரும் இந்தியாவின் விளையாட்டைப் பார்க்கவில்லை. அரசியல்- இராணுவம் மிதித்தது போதாதென்று இன்றும் எங்களது போராட்டத்தைச் சிதைக்க, சீரழிக்க, சின்னா பின்னப்படுத்தத் திட்டம் போட்டு நிலைமைகளைக் கையாண்டு வருகிறது இந்தியா. ஆனால், எங்கள் ரசிகர்கள் வேறுபடுத்தி ஒவ்வொன்றையும் மதிப்பதுபோல அல்லாமல், போராட்டத்தையும், ஆட்சியையும், அதிகாரத்தையும் தனது அரசியல் நலனோடு பார்க்கும் கொடுமையை இந்தியா தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. கருணாவின் அரசியலை எப்படி இந்திய ஊடகங்கள் தமது நலனுக்குரியதாகப் பயன்படுத்தியது என்ற கொடுமையான அரசியல் யதார்த்தத்தை இப்போது நோக்குவோம்.

கிழக்கு மாகாணத்தை வடக்கிலிருந்து பிரித்து, தனித்தனி அலகுகளாகப் பிரித்தாள தமிழ் விரோத சக்திகளும், அந்நிய சக்திகளும் பலதடவை திட்டமிட்டன. இலங்கை அரசாங்கம் மிக நீண்டகாலத்துக்கு முன்பே பல குடியேற்றத் திட்டங்களை மேற்கொண்டு தமிழரின் தாயகப் பிரதேசத்தைத் துண்டுபோட முயன்றது. கல்லோயா, வெலிஓயா என சிங்கள அரசுகளால் அந்நிய சக்திகளின் ஆலோசனையுடன் முன் வைக்கப்பட்ட திட்டங்கள் முழுமையாக.செயற்படாமல் முறிந்து போயின.

அந்த வரிசையில் கருணாவின் துரோகத்தனமான அரசியலும் ஒன்றாக மாறியது. ஆனால், கருணா என்ற தனிமனிதனை வளர்த்ததில் இலங்கையில் சிங்கள ஊடகங்கள் வகித்த பங்கைவிட இந்திய ஊடகங்கள் வகித்த பங்கு அதிகமானது.

சன் தொலைக்காட்சி, ஜெயா தொலைக்காட்சி,தூரதர்சன்,நசனல் என பலவகை தொலைக் காட்சி சேவைகளின் பிரசாரப்படுத்துகை எல்லையற்றதாக பெருகியிருந்தது. கருணா எனும் தனிமனிதனே விடுதலைப் புலிகளின் அச்சாணியாகவும், இராணுவ நகர்வுகளுக்கான பிரதான கர்த்தாவாகவும் பிரசாரப்படுத்தியதுடன், விடுதலைப் புலிகளே கருணாவில் தங்கியிருந்ததுபோல் காட்டியிருந்தனர். விடுதலைப் புலிகள் இயக்கம் முடிவுக்கு வந்துவிட்டது என்ற தோரணையில் தங்கள் செய்திகளையும், காட்சிகளையும் பரப்பிவந்தமை - இந்திய தொலைக்காட்சிகள் கருணா விடயத்தில் எவ்வளவு அக்கறை செலுததியிருந்தன என்பதை உணரமுடிகின்றது.

இதேபோன்றுதான் தமிழ் நாடு உட்பட இந்தியப் பத்திரிகைகளின் நடவடிக்கை எல்லையற்றிருந்தது. கருணாவை ஒரு புதிய புரட்சியாளனாகக் காண்பித்த பத்திரிகைகள் கருணாவின் நடவடிக்கைக்கு பிரதேச மட்டுமல்ல சர்வதேச அங்கீகாரத்தையும் ஏற்படுத்திக் கொடுக்க முயன்றன. குறிப்பாக 'இந்து' **(The Hindu)** பத்திரிகை தனது குடும்பத்திற்கே கருணாவின் விடயத்தை தீபோல் பரப்பியது. கருணாவின் யுகம் முடிந்துவிட்டதைப் பற்றி இந்துப் பத்திரிகை வரைந்த ஆசிரியர் தலையங்கத்தில் காட்டப்பட்ட விடயங்கள் அப்பத்திரிகையின் கொள்கை எப்படியானதென்பது தெரிய வந்தது. கருணாவுக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடவடிக்கை எடுக்க முயன்றபோது, எந்தத் தரப்பும் கருணாவை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஆதங்கம் வெளியிட்டது. இலங்கை அரசும் - விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட (யுத்த நிறுத்தம்) புரிந்துணர்வு உடன்பாடு முறிந்துவிட்டதென துயரப்படும் 'இந்து'ப் பத்திரிகை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியை ஏற்கமுடியாதென்றும், அது ஜனநாயகத் தேர்தல் அல்ல என்றும் கவலையடைந்தது.

இந்த நிலையில் எங்கள் தங்கைமார், சகோதரிகள் கொடுமையான முறையில் கதறக் கதறக் கற்பழிக்கப்பட்டபோதும் தந்தைக்கும், சகோதரனுக்கும் முன் தாயையும், மகளையும் ஒரேநேரத்தில் மானபங்கப்படுத்திய போதும் வகைதொகையின்றி, நூற்றுக்கணக்கில் எங்கள் இளைஞர்கள், யுவதிகள் கொல்லப்பட்டபோதும், கொடுமையான முறையில் தமிழர்மீது கறைபடிந்த வரலாறு இந்தியப் படைகளாலே எழுதப்படும் போதும், எங்கே இந்துப் பத்திரிகையின் ஜனநாயகம், மனிதாபிமானம், தனிமனித உரிமை போயிருந்தது.

பத்திரிகையின் அடிப்படை நாகரித்தை காணமுடியாத தமிழ் நாட்டு பிரஜைகளுக்கும் முழுமொத்த இந்தியப் பிரஜைகளுக்கும் இந்து என்ன செய்திருக்கிறது. இலவசச் சேலை கொடுத்தபோது கொல்லப்பட்ட 25 பெண்களைப்பற்றி அரசியலை மாநிலத்திலும், மத்தியிலும் விற்று வரும் இந்திய ஜனநாயகத்தை இந்து கண்டு கொள்ளவில்லை. மாறாக இலங்கைத் தமிழரின் ஜனநாயகத்தைப்பற்றியும், கருணாவின் இழப்பைப் பற்றியும் இந்துப் பத்திரிகை துயரப்படுகிறது.

உண்மையில் இந்துப் பத்திரிகையின் விருபபம் உடைந்து போய விட்டது என்பதே, அதன் ஆதங்கமாக உள்ளது. இந்திய ஆளும் வார்க்கத்தைப் போன்றதே இந்திய ஊடகமும் பார்ப்பனிய, இந்துத்துவ சாதியின் அடக்குமுறைக்குள் அகப்பட்டுள்ள ஊடகத்துறை தன்னை இந்தியாவில் மட்டுமல்ல இலங்கையிலும் எஜமானாக மதிக்கப்பட வேண்டுமெனக் கருதுகின்றது. தன்னை ஒரு எஜமானாகவும் எம்மை அடிமையாகவுமே கையாள விரும்புகிறது.

இந்திய ஊடகங்கள் தமிழ் மக்கள் மீது கொண்டிருக்கின்ற பற்றும் ஜனநாயகம் மீதும், துரோகிகள் மீதும் கொண்டிருக்கும் கரிசனையும் இந்திய நலன் சார்ந்ததாகவே அமைந்துள்ளது. எங்களில் பலர் இந்தியாவை தாய் நாடு என்றும் தந்தை நாடு என்றும் மதிப்பது போன்று ஊடகங்களின் தரத்தையும் முதன்மையையும் மதிக்கின்றனர். ஆனால், அவாகளே பேச்சு வார்த்தையை குழப்பி சமாதான முயற்சியை சீரழித்து விடுதலைப் புலிகளுக்குள் முரண்பாட்டையும் தமிழ் மக்களின் அரசியல் தலைமைகளையும் தேசிய ஒற்றுமையையும் உடைத்து சீரழிக்க விரும்புகின்றன. இந்திய ஊடகங்களே தமிழரின் ஐக்கியத்தை உடைக்க பாரிய திட்டங்களை வகுத்து செயல்பட்டு வருகின்றன.

இந்தியா தமிழ் இளைஞர்களையும், யுவதிகளையும் கலாசார ரீதியாக அழிப்பதற்கு தனது ஊடகங்களையும், ஊடகத்துறையினரையும் பயன்படுத்துகின்றது. கலாசார சீரழிவுகளை அறிமுகப்படுத்துவதில் இந்திய ஊடகங்கள் முனைப்பாக உள்ளன. பொழுதுபோக்கு சாதனம் என்ற போர்வையில் கலாசாரத்தைச் சிதைக்கின்ற வேலைகளை அந்த ஊடகங்கள் நிகழ்த்தி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இளைஞர் யுவதிகள் மட்டுமன்றி முதியவர்களையும் அவர்களது அணுகுமுறைகளையும் இந்த ஊடகங்கள் மாற்றி வருகின்றன. தமிழ் நாட்டு, தமிழ்ச் சமூகத்தைப் போன்று சேரியிலும், ஏரிக்கரையிலும், வீதியிலும், வாழ்க்கை நடாத்தும் சூழலை இந்திய ஊடகங்கள் இலங்கை தமிழர்களிடம் உருவாக்க விரும்புகின்றன. இலட்சக்கணக்கான மக்கள் பிச்சைக்காரராகவும், வறுமைக்குக் கீழ் சீரழியும் நிலையிலும் இருக்க இந்திய அரசு அமைந்துள்ளது இந்தியா தனது நலனை அடைவதற்கு பல தமிழ் புத்திஜீவி களையும், பிரபலங்களையும் விலைக்கு வாங்கியுள்ளது. ஆதாரபூர்வமாக நிறுவப்பட்டு வருகிறது. மேலும் இந்திய ஊடகங்களும் உளவுத்துறை யும் தமது நலனை அடைவதற்கு தமிழ் பிரதேசங்களில் திட்டமிட்டு சில வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக தமிழ் நாட்டு புத்திஜீவிகளையும், ஊடகத்துறையினரையும் தயார் செய்து அனுப்பிக் கொண்டிருகிறது. எனவே, தமிழ் சமூகம் விழிப்படைவது தமிழினத்துக்கும், அதன் நலன்களுக்கும் எப்போதும் பாதுகாப்பாக அமையும்.

இலங்கை அரசுக்கு 1000 கோடி ரூபாக்களை உதவியாக வழங்க விருப்பதாக வோஷிங்டன் மாநாட்டில தெரிவித்திருந்த அரசியலை நினைவுபடுத்தலாம்.

கருணாவின் அரசியல் தோற்றுவிட்டதென கண்ணீர் வடிக்கும் இந்திய ஊடகங்கள் கருணா புலிகளுடன் மோதாது உயிர்ச்சேதம் ஏற்படாது பின்வாங்கியதை பாராட்டத் தவறவில்லலை. கருணா என்ற தனிமனிதனைத் தொடர்ந்து பாதுகாப்பதில் இந்தியா கரிசணையாக இருந்ததென்பது தெளிவாகப் புலப்படுகின்றது.அவ்வாறு கருணா பின்வாங்கிய போது பிரதேசவாதத்தை நியாயப்படுத்தும் 'இந்து'ப் பத்திரிகை கருணாவை பலப்படுத்தியிருக்க வேண்டுமென கூறுகின்ற துரோகத்தனத்தை ஆற்றுகிறது. வாயைமூடி ஆங்கிலம் - ஸ்ரைலாக பேசும் எஜமானர்கள் விரும்பிப்படிக்கும், இந்து கூறும் பிரதேசவாதமும், துரோகம் பாதுகாக்கப்படவேண்டும் என்பதும் கருணாவின் துரோகத்திற்கு ஒப்பானதே. இதே கருத்தியல் வாதத்தின் அமுலாக்கத்தை 'இந்து' காஷ்மீரிலும், அஸாமிலும், நாகலாந்திலும் மேற்கொள்ள முயலுமா? என்பதே பிரதான கேள்வியாகும்.

எனவே, இந்திய ஊடகங்கள் எப்படி எம்மை ஏமாற்ற முயலுகின்றன என்பதில் தமிழ் மக்களாகிய நாம் விழிப்புடன் இருக்கவேண்டும். தமிழரின் நலனுக்காக ஒரு போதும் இந்திய ஊடகங்கள் செயற்பட்டது கிடையாது. அதற்கு இந்தியாவின் நலன், இந்துவின் நலன், பார்ப்பனிய - பிராமணியத்தின் நலனாகவே

**வாயைமூடி ஆங்கிலம் - ஸ்ரைலாக பேசும் எஜமானர்கள் விரும்பிப்படிக்கும், இந்து கூறும் பிரதேசவாதமும், துரோகம் பாது காக்கப்பட வேண்டும் என்பதும் கரு ணாவின் துரோகத்திற்கு ஒப் பானதே. இதே கருத்தியல் வாதத் தின் அமுலாக்கத்தை 'இந்து' காஷ்மீரிலும், அஸாமிலும், நாகலாந்திலும் மேற்கொள்ள முயலுமா? என்பதே பிரதான கேள்வியாகும்.**

---

மருத்துவம்

எஸ்.ஜெயா

# பழவகைகளும் அவற்றின் பயன்பாடுகளும்

### அன்னாசிப்பழம்

சீரணம், மலக்கட்டு, இருமல், வாய் நாற்றம், வாதநோய்கள் என்பவற்றை நீக்கும். உடம்பு, எலும்பு, பல் போன்றவற்றைப் பலப்படுத்தும். மழை காலத்தில் சாப்பிடுவது சிறந்ததல்ல. சிலருக்கு அன்னாசி ஒவ்வாமையை ஏற்படுத்துகின்றது. இப்படிப்பட்டவர்கள் தவிர்த்தல் நன்று.

### அப்பிள்பழம்

தாகம் உடல் வறட்சி, வயிற்று அழற்சி போன்றவற்றுக்கும், குடற்புண், பேதி, இரத்தப் பேதி, தள்ளுமூலம், வயிற்றுப் புண், வாய்ப்புண் போன்றவற்றைக் குணமாக்கும். இதன் தோலைச் சீவி நன்றாகச் சுத்தப்படுத்திச் சாப்பிடுதல் வேண்டும்.

### கொய்யாப்பழம்

வயிற்றுப்புண், மலக்கட்டு, வயிற்றுக் கோளாறு, இருதய படபடப்பு, தோல் கோளாறு என்பவற்றை நீக்கும். மூளை, எலும்பு, உடல் என்பன பலமடையும்.

### தோடம்பழம்

சூடு, குடல்வறட்சி, தாகம், மலக்கட்டு, கணச்சூடு, தலைச்சுற்று, சொறி, சிரங்கு, பல் கோளாறு போன்றவற்றைக் குணமாக் கும். மேனியை அழகாக்கும், உடலை வளப்பதுடன், கூடிய சக்தியைக் கொடுக்கும்.

### திராட்சைப் பழம்

பித்தக்கோளாறு, மலச்சிக்கல், வாதம், உடற்சூடு, கபம், வயிற்றுப்புண், மூலப்புண், நாவரட்சி, சிறுநீர்க்கடுப்பு, உடம்புவலி, தலைச்சுற்று, மேகச்சூடு, வாய்நாற்றம் போன்றவற்றைக் குணமாக்கும். கை, கால், மூளையைப் பலமடைய வைப்பதோடு, முகத்தினை அழகாக்கும்.

### நாவற்பழம்

நீரிழிவு, வயிற்றுப்புண், வாய்ப்புண், வாய் நாற்றம், இருமல், சிறுநீரகக்கோளாறு போன்றவற்றைக் குணமாக்கும். கடுத்தல், சீதவாத நோய் உள்ளபோது விலக்கவேண்டும். இதன் விதையினை நீரிழிவு உள்ளோர் கோப்பியில் கலந்து பாவிக்க நல்ல பெறுபேறு கிடைக்கும்.

### பப்பாளிப்பழம்

மலக்கட்டு, கண்நோய், வாய்நாற்றம், இருமல், வாய்வு, தொண்டைப்புண், வயிற்றுப் புண், கர்ப்பம் தொடர்பான நோய்கள், பல் நோய்கள் என்பவற்றைக் குணமாக்கும். யானைக்கால் வீக்கம் குறையும், உடம்பு, மூளை வலிமை பெறும், எதிர்ப்புச் சக்தியை உண்டுபண்ணும், கரு அழிக்கும் தன்மையும் உடையது.

### பலாப்பழம்

மூளை வலுவடைவதுடன், அறிவை விருத்தியாக்கும். இதை பசு நெய் அல்லது தேன் என்பவற்றுடன் சேர்த்து உண்டால் களைப்பு, இருமல் என்பன நீங்கும். அதிகம் உண்பது நல்லதல்ல. வாத, கப, பித்தங்களையும், கரப்பான் பிணிகளையும் உருவாக்கக்கூடியது.

### நாரத்தம்பழம்

பித்த குன்மரோகம் நீங்கும். இரைப்பைக்குப் பலம கொடுப்பதுடன், இரத்த விருத்தியை உண்டாக்கும். இரத்தத்தைச் சுத்திகரிக்கும் தன்மை கொண்டது.

### பாலைப்பழம்

கருங்கரப்பன், கிரந்தி இவை நீங்கும். இதன் விதையிலிருந்து எண்ணெய் எடுத்து, அதனை கரடு, முரடான தன்மைகள் நீக்கி மென்மையும் அழகும் பெறும்.'

### மாம்பழம்

உமிழ் நீரைச் சுரக்கச் செய்யும், சீரணத்தை எளிதாக்கும், மலட்டுத்தன்மையை நீக்கும், பசியை ஏற்படுத்தும், சொறி, சிரங்கை நீக்கும், ஆண்மை மிகுதியாகும், முகவரட்சி நீங்கி, இதயத்துக்கும், மூளைக்கும் பலம் கொடுப்பதுடன், பெண்களின் மாதவிலக்கை ஒழுங்காக்கும்.

### வாழைப்பழம்

வாழைப்பழத்தில் உடல் வளர்ச்சிக்கு முக்கியமான கல்சியம், பொஸ்பரஸ், கந்தகம், இரும்புச்சத்து, பொட்டாசியம் ஆகியவை அதிகளவில் இருக்கின்றன.

இதில் விற்றமின் எ.பீ.சீ. என்பன போதியளவில் காணப்படுவதால், தினசரி சில வாழைப்பழங்களைச் சாப்பிட்டுவந்தால், பக்கவாதநோய் பிற்காலத்தில் ஏற்படாமல் தடுக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

### விளாம்பழம்

பித்த சம்பந்தமான நோய்களுக்கும், நீரிழிவு நோய்களுக்கும் விளாம்பழம் சாப்பிடுவது நன்று. சர்க்கரை கலந்து சாப்பிட்டால், கல்லீரல் வீக்கத்தைக் குறைக்கும். அடிக்கடி ஏப்பம் வருவது குறையும், நல்ல பசி உண்டாக்கும். இதன் ஓட்டினை குடிநீரில் காச்சிக் குடிக்க இருமல், பித்தம் விலகும். அதிகம் உண்பதால் ஆண்மைக்குறைவு ஏற்படும்.

### தக்காளிப்பழம்

உடல் வறட்சி, வயிற்றுப்புண், மலச்சிக்கல், சிறுநீர் கோளாறு போன்றவற்றைக் குணமாக்கும். இதனைப் பழமாகவோ அல்லது யூஸாகவோ தயார்படுத்தி சாப்பிடலாம்.

### பேரீச்சம்பழம்

மலக்கட்டு, களைப்பு, தொண்டைக்கட்டு, பக்கவாதம் போன்றவற்றைத் தணிக்கும். மூளை, எலும்பு, தசை போன்றவற்றை வலுப்படுத்தும். இளைப்பு, மூட்டுவலி, உடம்பு அசதி ஏற்படாமல் தடுக்கும். ஆஸ்துமா நோயாளிகளுக்கு ஆகாதது ஆகும்.

### மங்குஸ்தான்பழம்

குடற்புண், வயிற்றுவலி, வாய்நாற்றம், உடலவறட்சி, மூலநோய்; இரத்தமூலம், மூலப்புண், சூதகவலி, கண் எரிவு, கணச்சூடு, பித்தம், குமட்டல், அன்னதோசம், இருமல் போன்றவற்றைக் குணமாக்கும். சிறுநீர்ப்பையைச் சுத்தப்படுத்தும்.

### இலந்தப்பழம்

வாந்தியை நிறுத்துவதுடன், உடலுக்கு வலுவைக் கொடுக்கும். பித்தமூச்சை விலக்கும். இந்தப்பழத்தினைப்புதர் செடிகள் உள்ள இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்*
*நடுஓரீஇ அல்ல செயின்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## பந்து இப்போது அரசின் பக்கம்...

அரசின் சமாதானப் பேச்சுக்குறித்த அழைப்புக்கு விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து, 'முதற்பதில்' வெளியாகியுள்ளது.

அதாவது, இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை அடிப்படையாகக் கொண்டு, ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்ட இடத்திலிருந்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க விடுதலைப்புலிகள் தயாராவுள்ளதை அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமல்ல, இந்தப் பேச்சுக்கள் முன்னைய பேச்சுவார்த்தைகளின் தொடர்ச்சியாக, புதிய நிபந்தனைகளோ, கட்டுப்பாடுகளோ எதுவுமின்றி, நோர்வேயின் அனுசரணையுடன் மட்டும் வெளிநாடுகளில் பேச்சுவார்த்தைகளை வைத்துக்கொள்ளவேண்டும் என்றும் அவர் தெளிவாகக் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் இந்தக் கருத்து நிலைப்பாடானது சரியானது மட்டுமல்ல நியாயமானதும், சாவதேச சமூகத்தால் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டதுமாகும். விடுதலைப் புலிகளின் இந்தப் பதில்குறித்து அரசாங்கம் நோர்வே அனுசரணையாளர்களிடம் என்ன முடிவை வெளியிடப் போகின்றது என்பது சில நாட்களில் அல்லது வாரங்களில் தெரியவரலாம். எனினும் இன்றைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் கூட்டுக்கட்சிகள் இந்த விடயம் குறித்தும், எத்தகைய நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளார்கள் என்பது ஏற்கனவே வெளிப்படையாகத் தெரியப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அரசால் இது குறித்து, உடனடியாக எந்தவொரு முடிவுக்கும் வரமுடியாத நிலையில் இருப்பதையும் உணரக்கூடியதாகவுள்ளது.

சமாதான முயற்சிகளின் நோர்வே அரசின் அனுசரணைக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தமையானது ஒரு தலைப்பட்சமான நடவடிக்கையென அரசைச் சாடியுள்ள, இன்றைய அரசின் தலைவிதியையே தீர்மானிக்கும் வலுக்கொண்ட சக்தியாக நாடாளுமன்றத்தில் விளங்கும் ஜாதிக ஹெலஉறுமய பேரினவாதக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான அத்துரலிய ரத்ன தேரோ அரசின் இந்த நிலைபபாட்டை ஏற்றுக்கொள்ளவே முடியாது என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை, இன்றைய அரசில் கிட்டத்தட்ட சமவலுவுடனும், சம பங்காளியாகவும் விளங்கும் ஜே.வி.பியினரும் நோர்வேயின் அனுசரணை முயற்சிகளை கடுமையாக எதிர்த்தவர்கள் என்பதுடன், தற்போதும் கூட நோர்வேயின் உதவியுடன் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியாது என்பதில் உறுதியாகவும் உள்ளனர்.

அண்மையில் ஜே.வி.பியின் பிரசார செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச இதனை வலியுறுத்தியுள்ளதுடன் இலங்கையின் சமாதான முயற்சிகளில் நோர்வேயை தலையிட அழைப்பது இலங்கையின் இறையாண்மைக்கும், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாகவே அமையும் என்றும், சமாதான முயற்சிகளில் இந்தியா உட்பட ஏனைய பிராந்திய நாடுகளையும் பங்குபெற வைப்பதுடன் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிலும் இந்தியா உட்பட பிராந்திய நாடுகளைச் சேர்ந்தவர்களையே உள்ளடக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

அது மட்டுமல்ல பேச்சுவார்த்தைகள் யாவும் இலங்கைக்குள்ளேயே நடைபெறவேண்டும் என்றும் அவர் இறுக்கமான கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஜாதிகஹெல உறுமயவினதும், ஜே.வி.பியினதும் கருத்துக்களை புறந்தள்ளிவிட்டு, ஜனாதிபதியால் தன்னிச்சையாக, சுதந்திரமாக சமாதான முயற்சிகள் குறித்து, தீர்மானங்களை எடுக்கமுடியுமா என்ற கேள்வி தவிர்க்க முடியாமல் எழவே செய்கின்றது.

கடந்தகாலங்களில் ஜே.வி.பியினதும், சிஹல உறுமய போன்ற ஏனைய சமாதான எதிர்ப்பு, விடுதலைப்புலிகளின் எதிர்ப்பு சக்திகளின் நடவடிக்கைகளுக்கெல்லாம் பின்புலமாக விளங்கிய பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவியான சந்திரிகா அவர்களின் ஒத்துழைப்புடன் நோர்வே மற்றும் சர்வதேச நாடுகளின் அனுசரணையுடனான ரணில் அரசின் பேச்சுவார்த்தை முயற்சிகளை குழப்புவதற்கு தீவிரமாக முயன்றதுடன் அத்தகைய சக்திகளின் விருப்பத்திற்கும், நிர்ப்பந்தத்திற்கும் இணங்க அந்த ஆட்சியைக் கலைத்ததுடன் அவர்களைக் கூட்டுச்சேர்த்தே தேர்தலை எதிர் கொண்டார் என்ற உண்மையையும், நாம் மறந்துவிட முடியாது.

கடந்த தேர்தலும் - புதிய அரசின் தோற்றமும், சந்திரிகாவின் சமாதான எதிர்ப்பு வெறியின் எதிரொலியாகும். இதனை அவராலும் கூட மறுக்கமுடியாது.

இந்த நிலையில் தானே உருவேற்றி ஆடவைத்த சமாதான எதிர்ப்புச் சக்திகளின் 'இனவெறிகலையாட்டத்தை' சந்திரிகா எப்படித்தணிக்கவோ அல்லது சமாளிக்கவோ போகிறார் என்பதே இப்போதுள்ள வினாவாகும்.

சந்திரிகாவினதும், கதிர்காமரினதும் அழைப்புக்களையும், அறிவிப்புக்களையும், இந்த சமாதான விரோத சக்திகள் நிச்சயமாக ஆதரிக்கப்போவது கிடையாது. அது அவர்களின் சுயத்திற்குமாறானது.

அப்படி அவர்கள் ஆதரிக்க முன்வந்தால் அது ஒரு பாசாங்குத்தனம் கொண்ட சதியாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த நிலையில் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை குறித்த தமது தெளிவான நிலைப்பாட்டை நோர்வே மூலம் அரசுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

பந்து இப்போது சந்திரிகாவின் கையில் - அரசின் பக்கம் உள்ளது. அவ்வளவுதான் இப்போது கூறமுடியும்.

## நாடும் நடப்பும்




# பத்திரிகையாளர் சிவராமின் இல்லம் பொலிஸாரால் திடீர் சோதனை

பிரபல அரசியல் விமர்சகர் தர்மரத்தினம் சிவராமின் (தராக்கி) கொழும்பு இல்லத்துக்குள் நேற்று முன்தினம் இரவு கொகுவெல - கல்கிசை பொலிஸார் திடீரென புகுந்து தீவிர தேடுதலை நடாத்தினர்.

இவரது வீட்டில் ஆயுதங்கள் இருப்பதாகச் சந்தேகம் கொண்டே தாம் இந்தத் தேடுதலை நடாத்தியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தேடுதல் நடாத்தப்பட்ட சமயம் சிவராம் மட்டக்களப்பில் சுதந்திர ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு, சுதந்திர ஊடகவியலாளர் தினத்தில் இந்தத் தேடுதல் நடாத்தப்பட்டது, ஊடகத்துறையினருக்கு விடுக்கப்பட்ட ஒரு பாரிய அச்சுறுத்தலாகவே கணிக்கப்படுகிறது. இதற்கு முன்னரும், பல தடவைகள் கொலைப் பயமுறுததல்கள் சிவராமுக்கு விடுக்கப்பட்டிருந்தது.

பொலிஸாரின் இந்தத் தேடுதல் நடவடிக்கையை இலங்கை தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் ஆர்.துரைரட்ணம் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

### -வடமராட்சி கிழக்கு நலன்புரி நிலையங்களில்-
## குடிநீர் வசதியை ஏற்படுத்திக் கொடுக்க பிரதேச செயலகம் நடவடிக்கை

(ஆழியவளை)

வடமராட்சிக் கிழக்கில் நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்குக் குடிநீர் வசதியினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ்.செயலக புனர்வாழ்வுப் பகுதியிலிருந்து நிதி உதவியினைப் பெற்று, இந்த மக்களுக்கு நான்கு பொதுக் கிணறுகளை அமைத்துக் கொடுக்கவுள்ளது.

இதன் பிரகாரம் குடத்தனையில் மூன்று கிணறுகளும், மணற்காட்டில் ஒரு கிணறும் அமைக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இந்த மக்களின் நன்மைகருதி வடமராட்சி கிழக்குப் புனரமைப்பு நிறுவனம் ஏற்கனவே இரண்டு கிணறுகளை அமைத்துக் கொடுத்துள்ளது.

மேலும் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆறு நலன்புரி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 99 குடும்பங்களைச் சேர்ந்த 400 பேர் வசித்து வருவதாகப் புள்ளிவிபரங்கள் தெரிவித்தன (122)

## ஐ.தே.க. உயர்மட்டத்தில் அடுத்தவாரம் மாற்றங்கள்

ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்டத்தில் அடுத்தவாரம் மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ.தே.கவின் நாடாளுமன்றக் குழுக்கூட்டம் கடந்தவாரம் இடம்பெற்றபோது கட்சியை மறுசீரமைப்புச் செய்வது தொடர்பாக ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாகவே மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரத்ன, எஸ்.பி.திஸநாயக்க, சஜித் பிரேமதாஸ போன்றோர் கட்சியின் உயர்மட்டப் பொறுப்புக்களில் நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறி 8, 9 ஆம் திகதிகளில்

அகில இலங்கை இந்து மாமன்றத்தினரால் நடத்தப்படும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறி எதிர்வரும் 8,9 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பிலிருந்து விரிவுரையாளர்கள் வரவுள்ளதுடன், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டனும், துறைத்தலைவர் இராஜபுவனேஸ்வரனும் கலந்துகொள்வார்கள். இந்நிகழ்வில் வண.கணேசானந்த மகாதேவா சுவாமிகள் அதிதியாகக் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவார்.

பயிற்சிக்காகப் பதிவுசெய்த சகல கிளிநொச்சி மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் அனைவரும் 8 ஆம் திகதி காலை 8.30 மணிக்குச் செயலகத்திற்குச் சமுகமளிக்குமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார்.

## வலயக் கல்விப் பணிமனைக் காணி சிரமதானம் மூலம் துப்பரவு

சமாதான செயல் உருவாக்கத்தின் ஓர் அங்கமாக ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்ட மூன்றுநாள் சிரமதான நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ், வலிகாமம் கல்வி வலய ஊழியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து புதிதாக வலயக் கல்விப் பணிமனைக்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட காணியைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர். இந்தக் காணியில் வெகுவிரைவில் வலயக் கல்விப் பணிமனைக்கு அத்திவாரமிடப்படவுள்ளது.

இதற்கான நிதி அரசாங்கத்திடமிருந்தும், பொது நிறுவனங்களிடமிருந்தும், கல்விச் சமூகத்திடமிருந்தும் திரட்டப்பட்டு வருகிறது. (101)

### விவசாயக் குடும்பங்களின்—
## வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்

(ஆழியவளை)

வடமராட்சிக் கிழக்கில் விவசாயக் குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் நோக்குடன், சமுர்த்தித் திட்டத்தின்கீழ் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்கள் வழங்கப்படவுள்ளன.

இப்பிரதேசத்திலுள்ள விவசாயக் குடும்பங்களுக்குக் கால்நடை வளர்ப்பிற்கு 10 ஆயிரம் ரூபாவும், மிளகாய்ச் செய்கையை மேற்கொள்வதற்கு 5 ஆயிரம் ரூபாவும் சமுர்த்தி வங்கியினூடாகக் கடனாக வழங்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தினைத் துரிதகதியில் செயற்படுத்துவதற்கு உதவி அரசாங்க அதிபரின் அனுசரணையுடன் இப்பிரிவில் உள்ள இரண்டு சமுர்த்தி வலயங்களிலும் கிராம அலுவலர் ரீதியாகச் சமுர்த்தி உத்தியோகத்தர்கள்மூலம் குடும்பரீதியாக அடிப்படைத் தரவுகள் திரட்டப்பட்டு வருகின்றன. (122)

## மருதங்கேணியில் மீளக்குடியேறியோருக்கு 100 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன

(ஆழியவளை)

மருதங்கேணியில் மீளக்குடியேறிய மக்களுக்கு மேலும் 100 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

உலக வங்கியின் நிதி உதவியுடன் வடகிழக்கு மாகாண சபை இந்தமுயற்சியில் இறங்கியுள்ளது. இந்தப் பிரதேசத்தில் போரினால் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ள ஆழியவளை, கட்டைக்காடு ஆகிய கிராமங்களிலேயே இந்த வீடுகள் அமைப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியேறிய இடங்களை நேரடியாகச் சென்று பார்வையிட்ட உலக வங்கிப் பிரதிநிதி நாராயணசாமி, உலக வங்கியின் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் வீடமைப்புப் பிரதிநிதி குரூஸ், யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை ஆகியோர் மக்களுடன் நேரடியாகக் கலந்துரையாடி இந்த முடிவை எடுத்தனர்.

ஒவ்வொரு வீடும் ஒரு இலட்சத்து பத்தாயிரம் ரூபா பெறுமதி கொண்டது. மேலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் 100 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாக உலக வங்கிப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (122)

நேர்காணல் ~

~ சர்வேஸ் ~

# ஓவியங்கள் பேசும் என்பது இவர் விடயத்தில் உண்மை



ஒரு மாலை வேளை - அவசரமாக ஒரு ஓவியவேலை செய்யவேண்டியிருந்தது. யாரைப் பிடிப்பது? மனம் ஒருதரம் சுழன்று வந்தது. இறுதியாக எனது நண்பன், ஓவியர் ஒருவரின் பெயரைச் சொன்னான். தேடிப் போனோம் இருவருமாக. பலரை விசாரித்து அறிந்து, இடத்தைப் பிடித்துவிட்டோம்.

அந்த இடத்தின் நிலைமைகளோ வார்த்தைகளுக்குள் கட்டுப்படாதவை. வாசலிலிருந்து பாதையின் இரு மருங்கும் அடர்ந்து வளர்ந்த பற்றைகள் நடுவே ஒரு நடைபாதை. அந்தப் பாதை முடிவில் - போரின் வடுவை முழுமையாகத் தாங்கிநிற்கும் ஒரு வீடு. ஏதோ அதில் ஒரு அறை. அவ்வளவாகச் சேதமடையாமல் இருக்கிறது. உள்ளே நுழைகின்றோம். நண்பன் மெதுவாகக் குரல் கொடுக்கின்றான். வெளியே வருகிறது ஒருருவம்.

அவ்வளவாக உயரமில்லை. மெலிதான உடல், வயோதிபம் மட்டுமல்லாது, கலைஞனின் மெடுக்கும் தெரியும் முகம். மெதுவான புன்னகை. புருவங்கள் உயர்கின்றன. அதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு, வந்த விடயத்தை சொன்னோம். வரவேற்றார். எஞ்சியிருந்த அந்த அறைக்குள் அழைத்துச் சென்று, பாயொன்றைப் போட்டு அமரச் சொன்னார்.

கண்கள் அறையை நோட்டமிட்டன. ஒரு மூலையில் எரிந்துகொண்டிருக்கும் அடுப்பு. இன்னொரு மூலையிலே சில உடுப்புக்களைத் தாங்கி நிற்கும் கொடி. மறுமூலையிலே, புத்தகங்களைத் தாங்கிநிற்கும் மரப்பலகையும், இரும்புப் பெட்டியும். சுவர்களில் வசனங்கள் எழுதி ஒட்டப்பட்ட சில கடதாசி மட்டைகள். அதில் எழுதப்பட்ட கருத்துக்களின் ஆழத்தைப் புரிந்துகொள்ளும் அனுபவம் இளைஞர்களாகிய எமக்கு இருக்கவில்லை. ஏனெனில், ஆன்மீகத்தின் அதியுச்சமான கருத்துக்கள் அவை. இத்தகையதொரு சூழ்நிலையில், தனிமையில் அந்நியப்பட்டிருப்பவர்தான் ஓவியக் கலைஞர் என்.ரி.மூர்த்தி என அழைக்கப்படும் என்.தெட்சணாமூர்த்தி.

அளவெட்டி மண்ணுக்கு - பல கலைஞர்களைத் தந்த பெருமை இருக்கிறது. அந்த மண் மாதா தந்த கலைஞர்களுள் ஒருவர்தான் மூர்த்தியும். யாழ்ப்பாணத்தின், ஓவியக் கலை வரலாற்றிலே மூர்த்தி அவர்கள் ஒரு சகாப்தம். ஆனால், பிரபலத்தையோ, பட்டம், பதவிகளையோ, கௌரவங்களையோ விரும்பாத அவரது தனித்தன்மையால், பலருக்குத் தெரியாமலே அந்தக் கலைஞர் வாழ்க்கையை நகர்த்திக்கொண்டிருக்கிறார்.

தினகரன், ஈழமுரசு, ஈழநாடு ஆகிய பத்திரிகைகளில், பிரதம ஓவியராக நீண்டகாலங்கள் பணியாற்றியவர். தினகரன் பத்திரிகையில், 15 வருடங்களுக்கும் மேலாக ஓவியராகவிருந்து, பல இலக்கிய கர்த்தாக்களின் நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் என்பவற்றுக்கு ஓவியம் வரைந்து, அவற்றை இன்னும் ஒருபடி மேலே பிரகாசிக்கச் செய்தவர் மூர்த்தி. அதேபோலவே ஈழநாடு, ஈழமுரசு பத்திரிகைகளிலும் அவரது பணியிருந்தது.

எமது விடுதலைப் போராட்டத்திற்கும் மூர்த்தி அவர்களுக்கும் மிகவும் நெருங்கிய தொடர்பிருக்கிறது. எத்தனையோ மாவீரர்களின் உருவப்படங்கள் அவரது கைவண்ணத்திலே உருவானவை. தன்னுடைய மறக்க முடியாத கலைப் படைப்புக்களுள் ஒன்றாக மாவீரர்தின வளைவொன்றில் தான் வரைந்த ஓவியம் ஒன்றை நினைவுகூருகிறார் மூர்த்தி.

"அது போர் முனைப்புப் பெற்றிருந்த காலம். விடுதலை உணர்வு எமது மக்களிடம் மேலோங்கியிருந்த நேரம். அந்த நேரத்தில் மாவீரர் தினம் என்பது எமது வாழ்வில் பிரிக்க முடியாததொரு பாகம். எல்லா மக்களும் ஏதோவொரு விதத்தில் மாவீரர் தினத்திற்குத் தமது பங்களிப்பை நல்கிக் கொண்டிருந்தார்கள். ஒரு ஓவியர் என்ற ரீதியிலே நானும் எனது பங்கைச் செய்துகொண்டிருந்தேன். கிட்டத்தட்ட 25 கிலோ மீற்றர் நீளத்திற்கும் மேலான தூரத்திற்கு வீதிகளில் என்னால் வரையப்பட்ட வளைவுகளே இடம்பிடித்திருந்தன.

அந்த வளைவுகளில் ஒன்றிலே புலிவீரன் குண்டுபட்டு மண்ணிலே சாய்வது போலவும், சாயும் அவனது இரத்தத்திலிருக்கும் துப்பாக்கியை தவழும் ஒரு குழந்தை ஏந்திக்கொள்வது போலவும் வரைந்திருந்தேன். அந்த ஓவியம் பலரது உணர்வுகளையும் துளைத்துச்சென்றது என்பதை என்னால் உணரக் கூடியதாகவிருந்தது. ஏனெனில் மாவீரர் நாளுக்குப் பின்னாலும் பல நிகழ்வுகளில் அந்த ஓவியத்துக்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது." எனக்கூறி நிதானித்தவர்,

தான் பல தரப்பட்ட ஓவியத்தை வரைந்துள்ளதாகவும், இலங்கையின் பல பாகங்களிலுள்ள ஆலயங்களிலும் பல ஓவியங்களைச் சுவர்களில் வரைந்துள்ளதாகவும் நினைவுகூருகிறார்.

ஈழத்துச் சிதம்பரம் - கீரிமலை நகுலேஸ்வரம், சின்னக் கதிர்காமம் எனப் பிரபலமான பல ஆலயங்கள் மூர்த்தியின் ஓவியங்களைத் தாங்கி நிற்கின்றன.

ஆலயங்களில் மட்டுமல்லாது பல கல்விக்கூடங்களிலும் இவரது ஓவியங்கள் உள்ளன. யோகர் சுவாமி, நடராஜர் வடிவம் என பலதரப்பட்ட ஓவியங்களும் இவரால் வடிவமைக்கப்பட்டுள்ளன. அண்மையில் இவரால் வரையப்பட்ட ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளின் ஓவியம் வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவை, கலாசார விழாவின்போது பலரது பாராட்டையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவற்றைவிட காந்தரூபன் அறிவுச்சோலை, செஞ்சோலை, தமிழீழ நுண்கலைக் கல்லூரி என்பவற்றிலும் ஓவிய ஆசிரியராக இவர் தனது பணியை ஆற்றியிருந்தார். காந்தரூபன் அறிவுச் சோலையில் நிகழ்ந்த சில மறக்க முடியாத அனுபவங்களைச் சொல்லத்தொடங்கினார்.

"ஒருநாள் இரவு எட்டு மணியிருக்கும். நான் நினைக்கிறேன் - அது கிறிஸ்மஸ் பெருவிழா நாளாக இருக்கவேண்டும். இரு குழந்தைகளும் ஒரு ஆசிரியருமாக என்னிடம் வந்தார்கள். அங்கிருந்த யேசு பாலனின் சிலை உடைந்துவிட்டதாகவும், உடனடியாகப் புதிதாக ஒரு சிலையை சவர்க்காரத்திலே வெட்டியெடுக்கவேண்டும் எனவும் கூறினார்கள். அவர்களது அன்புக் கட்டளையை அந்தச் சூழ்நிலையிலே என்னால் தட்டமுடியாமல் இருந்தது. சம்மதித்துவிட்டேன் அவர்கள் சென்றுவிட்டார்கள்.

காலையில் அவர்கள் துயிலெழுந்து வந்ததும். அவர்களது கைகளிலே யேசு பாலனைக் கொடுத்தேன். ஒருநாள் இரவிலே நான் அந்த யேசுபாலனைப் பிரசவித்திருந்தேன். அந்த சிலைகூட பலரது பாராட்டைப் பெற்றது. அவற்றை என்னால் மறக்கமுடியாது" என்றார்.

மறக்கமுடியாதது என்றவுடன்தான் எமகது ஒரு விடயம் ஞாபகம் வந்தது. உங்கள் வாழவில் மறக்கமுடியாத வேறு ஏதாவது சம்பவங்கள் உண்டா எனக் கேட்டோம்.

சற்று நேர சிந்தனைக்குப் பின் தனது உதடுகளைத் திறந்தார் -

காந்தரூபன் அறிவுச் சோலையிலே கற்பித்துக்கொண்டிருந்த காலம். நான் தங்கியிருந்த இடத்திற்கு வாகனங்களில் வரமுடியாது. நடந்துதான் வரவேண்டும். ஒருநாட் காலை இரண்டு பேர் என்னை நோக்கி நடந்து வருவது தூரத்திலே தெரிந்தது. கிட்ட வந்ததும் அவர்களைத் தெரிந்துகொண்டேன் - கடற்கரும்புலிப் பெண் போராளிகள் நளினியும், மங்கையும் தான் அது.

"ஐயா சுகமா இருக்கிறியளோ! என்று அவர்கள் கேட்க, எனக்கு என்ன குறை நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என நான் வினாவ நாங்களும் சுகமாகவே இருக்கிறோம். எங்கள் இருவருக்கும் ஒரு ஆசை. அது என்னெண்டா... நாங்கள் செத்தபிறகு எங்களின்ர படத்தை நீங்கள் கீறவேண்டும்... என்றனர் அவர்கள்.

> **ஐயா... எங்கள் இருவருக்கும் ஒரு ஆசை... அது என்னெண்டா... நாங்கள் செத்தபிறகு எங்களின்ர படத்தை நீங்கள் தான் கீறவேண்டும்... என்றனர் அவர்கள். ஐயையோ, வாழும் பிள்ளைகள் அப்படிச் சொல்லக்கூடாது! நான் கூறிமுடிக்கும்முன்.... ஐயா நாங்கள் சாகத் துணிந்தவர்கள். நீங்கள் எமது விருப்பத்தை நிறைவேற்றி வைக்கவேண்டும் என்றவர்கள் நிறையப் பேசிவிட்டுச் சென்றுவிட்டார்கள். சென்றவர்கள் திரும்பிவரவில்லை. இரு கிழமைக்குப் பின் அவர்கள் கடலிலே காவியமான செய்தி என் காதுக்குக் கிட்டியது. உடனே எனது தூரிகைகள் தமது வேலையை ஆரம்பித்தன. பத்து அடி உயரமாக நளினியும் மங்கையும் வளர்ந்து நின்றார்கள்.**

ஐயையோ, வாழும் பிள்ளைகள் அப்படிச் சொல்லக்கூடாது! நான் கூறிமுடிக்கும்முன்.... ஐயா நாங்கள் சாகத் துணிந்தவர்கள். நீங்கள் எமது விருப்பத்தை நிறைவேற்றி வைக்கவேண்டும் என்றவர்கள் நிறையப் பேசிவிட்டுச் சென்றுவிட்டார்கள். சென்றவர்கள் திரும்பிவரவில்லை. இரு கிழமைக்குப் பின் அவர்கள் கடலிலே காவியமான செய்தி என் காதுக்குக் கிட்டியது. உடனே எனது தூரிகைகள் தமது வேலையை ஆரம்பித்தன. பத்து அடி உயரமாக நளினியும் மங்கையும் வளர்ந்து நின்றார்கள். கரும்புலிகளின் படங்களை வரைவதற்கு தலைவரின் அனுமதிபெறவேண்டும். அந்தப் பிள்ளைகளின் ஆசையையும் எனது துடிப்பையும் தலைவர் தட்டிக்கழிக்கவில்லை. அந்தப் படங்கள் பின்னர் மாவீரர் வளைவுகளில் இடம்பிடித்து பலரையும் ஈர்த்து நின்றன. என்றவரின் கண்களில் ஓரிரு நீர்த்துளிகள்.

இந்தப் பக்கங்களுக்கு அப்பால் கலைஞர் மூர்த்திக்கு இன்னொரு பக்கமும் உள்ளது. இயல்பாகவே இறை நம்பிக்கையும், ஆன்மீக ஈடுபாடும் கொண்டவர். வவுனியா கலை இலக்கியப் பேரவையினர் ஒரு சமயம் திருக்குறள் ஓவியப் போட்டியொன்றை நடாத்தியிருந்தார்கள். அந்தப்போட்டியில் இவர் ஓவியம் வரைந்து அனுப்பினார். இவரது ஓவியம் முதற் பரிசு பெற்றது. அதற்குப் பரிசாக தங்கப் பதக்கமும் வழங்கினார்கள். ஆனால், அதை மூர்த்தி அவர்கள் கிளிநொச்சியிலுள்ள முதியோர் இலலம் ஒன்றுக்கு அன்பளிப்பாக வழங்கிவிட்டார். விருதுகளையும் பட்டங்களையும் ஏற்கமறுக்கும் இந்த அற்புதக் கலைஞர், 'சமூகம்' கலைஞர்களுக்குரிய மரியாதையை அளித்தால் போதும் என்று ஆதங்கப்படுகிறார்.

பத்திரிகைப் பணிக்கும் மூர்த்திக்கும் இடையிலான தொடர்பை வைத்துக்கொண்டு, தாங்கள் பத்திரிகைகளில் பணியாற்றிய சூழ்நிலைக்கும், தற்போதைய சூழ்நிலைக்கும் ஏதாவது வேறுபாடுகள் இருக்கின்றனவா எனக் கேட்டோம்?

ஆம், நிறையவே இருக்கிறது. முன்னர் பத்திரிகைகளில் - ஓவியர்கள் அலுவலகத்திலேயே நிரந்தரப் பணியாளர்களாகக் கடமை புரிவார்கள். ஆனால், தற்போது பெரும்பாலும் அந்தநிலை மாறி ஒரு பகுதிநேர வேலையாகவே ஓவியத்தை வரைந்துவருகிறார்கள்.

உண்மையில் ஒரு பத்திரிகை ஆசிரியருக்கும், ஓவியருக்குமிடையில் நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டும். அப்போதுதான் தரமான ஓவியங்களைப் படைக்கமுடியும். ஒரு சிறுகதைக்கோ, நாவலுக்கோ ஓவியம் வரைந்தால் அந்தக் கதை வெளித்தெரிவதை விட ஓவியம்தான் வெளித்தெரியும். எனவே, ஓவியமானது கதையை வாசிக்கவேண்டும் என்ற ஆர்வத்தை வாசகர்களிடம் தூண்டக் கூடியதாக இருக்கவேண்டும்.

நான் முன்னர் வரையும்போது கதையோடு சம்பந்தப்படாத சில சுவாரஸ்யமான விடயங்களை சிறியளவில் அந்த ஓவியத்துக்குள் வரைந்துவிடுவேன். அது அந்தக் கதையையோ நாவலையோ வாசிக்கத் தூண்டுவதாக இருக்கும். முன்னர் ஓவியத்திற்குக் கதை எழுதும் முறையொன்றை பத்திரிகைகள் கையாண்டு வந்தன. இது மிகவும் பயனுள்ள விடயமாகும். ஏனெனில் எழுதத் துடிக்கும் எத்தனையோ கரங்கள் எழுதும். தினகரனுக்கு அவ்வாறு பலரை எழுதவவைத்த பெருமையுள்ளது. ஆனால், இந்த விடயத்திலே ஓவியர் மிகவும் திறமையானவராக இருக்கவேண்டும்.

பேராசிரியர் கைலாசபதி அவர்கள் தினகரன் ஆசிரியராக இருந்தபோது நான் ஓவியராகக் கடமை புரிந்தேன். அவர் மிகவும் திறமையானவர். அவருக்குக் கீழே பணி புரிந்தது பெருமையாக இருக்கிறது. மீண்டும் பத்திரிகைகளில் பணிபுரிய வேண்டும் எனும் ஆவலும் உள்ளது எனத் தனது விருப்பத்தை வெளியிட்டார்.

ஒரு ஓவியக் கலைஞருக்குப் பொறுமையும், அமைதியும் தேவையெனக்கூறும் இந்தக் கலைஞன் ஒரு அற்புதமானவர். ஆனால், எமது சமூகம் அந்தக் கலைஞனுக்கு வேண்டியதைச் செய்யத் தவறிவிட்டது. வாழும்போது ஒரு கலைஞனை வாழ்த்தப் பழகும் பழக்கத்தை எமது சமூகம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

சிறந்ததொரு கலைஞனைச் சந்தித்த மனநிறைவு எம்மிடம். அது மட்டுமல்லாது அவரது உணர்வுகளை எம்மோடு பகிர்ந்து கொண்டதில் அவருக்குத் திருப்தி. அதனால், எமக்கும் மகிழ்ச்சி. ☆

மக்கள் முகம்

சி. சந்தானகுமாரன்

# தவறுகள் திருத்தப்படுமா? தொடரப் போகின்றனவா?

"கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக" என்பது வள்ளுவப்பெருந்தகையின் குறள் அமுதமாகும். அதாவது எவ்வித பிழைகள், சந்தேகங்கள் இன்றி படிக்க வேண்டும். அதன்பின் அவ்வாறே வாழ்க்கையில் பின்பற்றி நடக்க வேண்டும் என்பதாகும்.

இன்று படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் பலர் முற்றும் அறிந்து - கசடு அறக் கற்காத காரணத்தால், சொற்பிழை பொருட்பிழை, உச்சரிப்புப்பிழை, மொழிபெயர்ப்புப் பிழை என அனேக தவறுகளை சமுதாயத்திற்கு ஊட்டுகின்றனர். இவர்கள் மூலம் கற்கும் சமுதாயமும் தெளிவற்ற, விளக்கமற்ற அரைகுறை படிப்பாளிகளாகவே இனி வருங் காலங்களில் உருவாகப் போகிறார்கள் என்ற மனத்தாக்கம் பெற்றோர்கள் மத்தியில் நிலவுகின்றது.

2003 ஆம் ஆண்டில் முதன்முதலாக இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் அச்சிட்டு வெளியிடப்பட்ட தரம் 7க்கான ஆங்கிலமொழி மூல கணிதபாட (MATHEMATICS) நூலின் பின் பக்கத்திலுள்ள அருஞ்சொல் அகராதியில் (GLOSSARY) ஏராளமான எழுத்துப்பிழைகளும், மொழி பெயர்ப்புப் பிழைகளும் உள்ளன. இவற்றைச் சரியான சொற்பதம் என நினைத்து படிக்கும் மாணவர்களின் கல்வி நிலையை எவ்வாறு கூறுவது. அதில் உள்ள பிழைகளை அப்படியே சுட்டிக்காட்டுவது மிகப் பொருத்தமானதாகும்.

**ANTI CLOCK WISE** - இடஞ்ரிசுழி, **AXIS OF SYMMETRY** சமச்சிர அச்சு, **BILATERAL SYMMETRY** இருபுடைச் வமச்சீர் **COINCIDE** பொருங்து, **COLUMN** நினம், **CONCEPT** எண்ணக்கரு, **COORDINATEPLANE** ஆள்ளுற்றுத்தலெம் **DEGREE** பாமை, **DIAGONAL** முலைவிட்டம், **ENDPOINT** முளைப்புள்ளி, **EGUIVALENT RATIO** வமவலு விகிதம், **EXERCISE** பறிற்சி, **IMPROPER FRACTION** முறைமையில்லாப்பள்மை, **INEGUALITY** சமளிலி, **LIGUID MEASURE** திரவ அள்வீடு **PAIR OF COMPASSES** வேராயம், **PROPER FRACTION** முறைமைப்பிள்மை, **PROTRACTOR** பாமைமானி, **RACK** ஞுந்தானம், **REGULAR HEXAGON** ஒழுங்கான அறுகோணணி, **RELATION SHIP** தொடர்புடைனம், **SIDE ELEVATION** பக்யக சிலைப் யப்படம், **TEMPERATURE** வெப்ப நிகை, **TETRA HEDRON** நான்ககி, **WEATHER** வாளிலை, **VALUE** பெறுமானம்ய.

இவ்வாறு மேற் கூறப்பட்ட பிழைகள் புத்தகத்தில் காணப்படுமிடத்து இவற்றை கற்பிக்கும் ஆசிரியர்களி டத்திலும் குழப்ப நிலை தோன்றுகின்றது. சிலர் பிழைகளை திருத்தி கற்பிக்கிறார்கள். வேறு சிலர் புத்தகத்தில் உள்ளவாறு அதுவே சரியானது என்ற எண்ணத்தில் எவர் சொல்லையும் கேளாது கற்பிக் கின்றனர். இதனால் பாதிப் படைவது மாணவ சமுதாயமே.

இது மட்டுமல்ல ஆரம்பப் பிரிவு முதல் மேல் வகுப்பு வரையான மாணவர்களுக்கு அச்சிடப்படுகின்ற தமிழ், சைவசமயம் போன்ற நூல்களிலும் எழுத்துப் பிழைகளும், பொருள் பிரிவுகளும், தவறுகள் நிறைய உண்டு.

இந்த தவறுகள்சம்பந்தமாக யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினர் 'தவறுகளும் திருத்தங்களும்' என்னும் தலைப்பில் ஒவ்வொரு வகுப்பு புத்தகத்திலும் உள்ள தவறுகள், பிழைகளை சுட்டிக் காட்டி அவை எவ்வாறு திருத்தி வாசிக்கப்பட வேண்டுமெனவும் நூலாக அச்சிட்டு வெளியிட்டுள்ளனர்.

நூல் உருவாக்கல் குழுவில் அங்கம் வகிப்போர் சாதாரண படிப்பாளி களல்ல. நிறைய பட்டங்கள் பெற்ற பெருத்த அறிவாளிகளாக இருந்தும் இப்படிப்பட்ட பிழைகளைக் கண்டுபிடித்து சீர்செய்யாது பாடப் புத்தகங்களை வெளியிடுவது அவர்களின் பொறுப்பற்ற, கடமை உணர்வு அற்ற தன்மையையே வெளிக்காட்டுகிறது.

இப்படிப்பட்ட பிழைகள் பல வருடகாலமாக தொடர்ந்த வண்ணமேயுள்ளது. இத்தவறுகளை வலய மட்டக்கல்விப் பணிப்பாளர்கள் மேலிடத்திற்கு அறிவித்து வருங் காலத்தில் சீரிய நூல்களாக வெளிவர ஆவன செய்யவேண்டும். இல்லையேல் இலவச பாடநூல் விநியோகம் என்பது தரமற்ற நிவாரண விநியோகம் போலவே அமைந்துவிடுமென பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

## சிறைக் கைதியை சீப்பினால் தாக்கிய

# அல்கொய்டா உறுப்பினருக்கு 32 வருட சிறைத்தண்டனை!

### நியூயோர்க் நீதிமன்றம் தீர்ப்பு

- ஒஸாமா பின்லேடனின் முன்னாள் உதவியாளர் ஒருவர் 2000 ஆம் ஆண்டு சிறையில் இருந்த வேளை - சிறைக்காவலாளியின் கண்ணில் சீப்பினால் குத்தி அவரது பார்வையை இழக்கச் செய்துள்ளார். இதனால், அவருக்கு 32 வருட சிறைத்தண்டனை நியூயோர்க் நீதிமன்றால் வழங்கப்பட்டது.

இந்தச் சம்பவத்திற்கு தான் வருந்துவதாகவும், பாதிக்கப்பட்டவரிடம் மன்னிப்புக் கேட்பதாகவும், 46 வயதுடைய ம.்.மூட் சலீம் தெரிவித்தார்.

சிறையில் தான் இருந்தவேளை- சிறைக்காவலாளி தன்னை அவமானப்படுத்தி பேசியதாகவும், அதனால்- அவமானம் தாங்கமுடியாமல் அவரைத் தாக்கியதாகவும் சலீம் தெரிவித்தார்.

சலீமினால் தாக்கப்பட்ட சிறைக் காவலாளியான பெப் - மூளை பாதிக்கப்பட்டு, கண்பார்வை இழந்த நிலையில் தற்போது சக்கர நாற்காலியில் உள்ளார்.

சலீமிற்கெதிராக நீதிமன்றில் விசாரணை நடந்தபோது பாதிக்கப்பட்டவரான பெப் சீப்பொன்றை நீதிமன்றில் காட்டி, இவர் என்னைப் பலமுறை, திருப்பித், திருப்பித் தாக்கினார் எனச் சத்தமிட்டார்.

பெப் நீதிமன்றத்தைவிட்டு வெளியேறிய பின், சலீம் நீதிபதியைப் பார்த்து என்னை மன்னிக்கவும், அவரின் இழப்பை நான் உணர முயல்கின்றேன் எனத் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதுடன் சிறைக்காவலரைத் தான் கொலை செய்ய முயற்சித்தாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன், சிறைக்காவலரை தான் தாக்கியதன் நோக்கம், சிறைக் கதவின் திறப்பை எடுத்து கதவைத் திறந்து இரு சட்டத்தரணிகளைக் கொல்லவெனவும் தெரிவித்தார்.

நீதிபதி மேற்படி சம்பவத்தை இது ஒரு கொடூரமான செயல் எனத் தெரிவித்தார்.

சலீம் அல்கொய்டா அமைப்பின் முக்கிய உறுப்பினர். 1998 ஆம் ஆண்டு கென்யாவிலுள்ள அமெரிக்கத் தூதுவராலய குண்டுவெடிப்பு தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

இந்தத் தாக்குதலில், இவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், இவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கிறிஸ்தவ, முஸ்லிம்களிடையே மோதல்;

# நைஜீரியாவில் 67 பொதுமக்கள் பலி!



நைஜீரியாவில் நேற்றுமுன்தினம் முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையே நடந்த கைகலப்பில் 67 பேர் கொல்லப்பட்டுள்ளனர். தற்போது நிலைமை சுமுக நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக அந்த நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரரோக் மிலிற்ரியா என்ற கிறிஸ்தவ குழு புலானிஸ் என்ற முஸ்லிம் குழுவைத்தாக்கியதால் இச்சம்பவம் நடந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தச்சம்பவத்தில் கொல்லப்பட்வர்களின் மேலும் பல சடலங்கள் மீட்கப்படலாம் என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சென்ற மாதம் கிறிஸ்தவ விவசாயிகளுக்கும், முஸ்லிம் பண்ணையாளர்களுக்கும் இடையே நடந்த கலவரத்தால், நானூறுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவித்தன.

சம்பவம் நடந்த மாகாணத்தின் உதவி ஆணையாளர் சொற்ரோனிய லக்கம செய்தியாளர்களுக்கு தெரிவிக்கையில், தாம் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு சென்றதாகத் தெரிவித்தார்.

இதுவரை நாம் 67 சடலங்களை மீட்டுள்ளோம். நாம் இன்னும் தொடர்ந்து தேடுதல் நடாத்துகிறோம். அனேகமாக இன்னும் பல சடலங்கைளை நாம் பெற முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

முஸ்லிம் புலானி மாட்டுப்பண்ணையாளர்களும், கிறிஸ்தவ ரரோக் விவசாயிகளும் கடந்த இரண்டு மாதமாக மத்திய நைஜீரியாவில் கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

முக்கியமாக இந்தக் கைகலப்பு நிலம், மாடுகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டது. இதனால், ஆயிரக்கணக்கில் மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர்.

இந்த வருடம் மதக் கலவரங்களினால் நைஜீரியாவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.




## இஸ்லாமிய பயங்கரவாதிகளின்

# அச்சுறுத்தல் காரணமாக தான் குழப்பமடைந்துள்ளாராம்!

### ஸ்பெயின் முன்னாள் பிரதமர் தெரிவிப்பு

இஸ்லாமிய பயங்கரவாதிகளினால் தான் அச்சுறுத்தப்பட்டதனால் குழப்பமடைந்துள்ளதாக முன்னாள் ஸ்பெயின் பிரதமர் தெரிவித்துள்ளார்.

எரா என்ற இஸ்லாமியக் குழுவினருக்கு எதிராக ஸ்பெயின் எடுத்த நடவடிக்கையே இந்த அச்சுறுத்தலுக்கு காரணமென தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மார்ச் மாதம் ஸ்பெயின் மட்றிட் பகுதியில் நடத்தப்பட்ட ரயில குண்டுத்தாக்குதலுக்குப் பின்னர் நடத்தப்பட்ட தேர்தலில் முன்னாள் பிரதமரான ஜோஷ் மேரியா அஷ்நாரின் கட்சி தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த ரயில் குண்டுவெடிப்பு சம்பவம் நடந்த இடத் தில் ஸ்பெயின் அரசு படையினரின் பாதுகாப்பைக் குறைத்திருக்கலாமெனவும் ஊகம் நிலவுகின் றது.

முன்னாள் பிரதமர் ஜோஷ் மேரியா, எரா குழுவினருக்கெதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளே இந்தக் குண்டு வெடிப்புக்கு காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், ஸ்பெயின் படைகள் ஈராக்கில் செயற்பட்டதே இந்தக் குண்டு வெடிப்புக்குக் காரணமென வேறு சிலர் தெரிவிக்கின்றனர்.

ஸ்பெயினின் தற்போதைய பிரதமரான ஜோஷ் லூயிஸ் ஷபாட்டிரோ ஈராக்கிலிருந்து ஸ்பெயின் படைகளை மீள அழைப்பதென தனது தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்து பதவிக்கு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



முன்னாள் பிரதமரான ஜோஷ் மேரியா தற்போது எழுதியுள்ள புத்தகமொன்றில் - மார்ச் 11 இல் மட்றிட்டில் நடந்த தாக்குதல் இஸ்லாமிய பயங்கரவாதத்தின் அச்சுறுத்தலாகும். இதற்காக நான் மக்களிடம் மன்னிப்புக் கோருகின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இவ்வாறு நடக்குமென நாம் எதிர்பார்க்கவில்லை. பாதுகாப்புப்படையை அடிப்படைவாதிகளின் அச்சுறுத்தலுக்கு எதிராகக் குறைத்ததும் இதற்குக் காரணமென அவர் தனது நூலில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ஈராக் கைதிகள் துன்புறுத்தல்

# 6 அமெரிக்க படையினர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது!



ஈராக் சிறைக் கைதிகளை கொடூரமான முறையில் நடத்திய 6 அமெரிக்கப்படைவீரர்கள் மீது அமெரிக்க இராணுவம் குற்றம் சுமத்தியுள்ளது.

மேற்படி குற்றச்சாட்டுகள் இராணுவ நீதிமன்ற அமைப்பில் ஆராயப்படுவதாக அமெரிக்க இராணுவப் பேச்சாளர் பி.பி.சியின் செய்தியாளருக்கு தெரிவித்தார்.

பேச்சாளர் பிரிகேடியர் ஜெனரல் மாக் திமிற் தெரிவிக்கையில், தாம் குற்றத்தில் பங்கு பற்றாவிட்டாலும், இந்தக்குற்றத்தை செய்தவர்களை மேற்பார்வை செய்தவர் என்ற வகையில் இருப்பதாக குறிப்பிட்டார்.

பிரிகேடியர் ஜெனரல் ஜெனிஸ் கார்பின்சிக் தெரிவிக்கையில் - தாம் 800 இராணுவ பொலிஸ்காரருக்கு பொறுப்பாளராக இருந்தும், தமக்கு இவ்வகையான நடவடிக்கைகள் தெரியாதென்றும் படத்தை பார்த்த பின்பே தான் அதிர்ச்சியுற்றதாவும் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், ஒரு படத்தில் இராணுவத்தினரின் முகங்கள் காணப்படாவிட்டாலும் 32 இராணுவக் கால்களைக் காணக் கூடியதாக இருந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

ஏழு இராணுவத்தினருக்கு எச்சரிக்கை கடிதங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவ் ஏழு பேரும் எச்சரிக்கையை எதிர்த்து வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

ஜனாதிபதி புஷ் பாதுகாப்பு செயலர் டொனால்ட் ரம்ஸ்பீல்டிடம் இப்படியான செய்கைக்கு தண்டனை வழங்கும்படியும், எந்த ஒரு போர் வீரரும் இப்படியொரு வெட்கமான, கொடூரமான செயலை ஈராக் கைதிகளுக்குச் செய்திருப்பின் கடுமையான நடவடிக்கையை எடுக்கும்படியும் கேட்டுள்ளார். இதை வெள்ளை மாளிகை ஊர்ஜிதம் செய்தது.

வெள்ளை மாளிகையின் பேச்சாளர் ஸ்கொட் மக்கிலன் தெரிவிக்கையில், எமது இராணுவம் இப்படியொரு செயற்பாட்டை பார்த்துக் கொண்டு இருக்காது எனத் தெரிவித்தார்.

ஜெனரல் கார்பின்கிக் தமது கருத தில் இராணுவ உளவுப்படைகள ஈராக் சிறைச்சாலையில் இப்போது 24 மணித்தியாலமும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

# இஸ்ரேலிய படையினரின் தாக்குதலில் 2 ஹமாஸ் உறுப்பினர்கள் காஸாவில் பலி!

(ஜெருசலேம்)

இஸ்ரேலியப் படையினர் காஸாப் பகுதி மீது நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் இரண்டு ஹமாஸ் அமைப்பின் உறுப்பினர்கள் உயிரிழந்துள்ளதுடன் மற்றும் பல பொது மக்களும் காயமடைந்துள்ளனர்.

அத்துடன், காஸாப் பகுதியில் அமைந்துள்ள ஹான் யூனிஸ் என்ற பலஸ்தீன அகதிமுகாம் மீது இஸ்ரேல் படையினர் ஹெலிகொப்ரர் மூலம் தாக்குதலை நடாத்தியுள்ளனர். இந்த அகதிமுகாமில் ஆயுதம் தாங்கிய குழுவொன்று இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - இஸ்ரேலியப் படையினர் பலஸ்தீனத் தலைவர் யாசீர் அரபாத்தின் தலைமை அலுவலகத்தை சுற்றி வளைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரமலா பகுதியிலுள்ள அரபாத்தின் தலைமை அலுவலகத்தை முற்றுகையிட்டுள்ள இஸ்ரேலியப் படையினர், டசினுக்கும் மேற்பட்ட இராணுவ் வாகனங்களில் சென்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த இரண்டு வருடங்களாக ரமலா பகுதியிலுள்ள தலைமை அலுவலகத்தில் அரபாத் வசித்து வருவது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், சந்தேகத்திற்கிடமானவர்களை இஸ்ரேலிய இராணுவம் கைது செய்து வருவதாகவும் ஆனால், இது அரபாத்தின் சுற்றிவளைப்பு நடவடிக்கையுடன் தொடர்புபட்டதல்ல எனவும் இஸ்ரேலிய இராணுவம் அறிவித்துள்ளது.

அரபாத்தின் உயிருக்கு ஆபத்து வராது என்பதனை தன்னால் இனிமேலும் உறுதிப்படுத்த முடியாதென இஸ்ரேல் பிரதமர் 'ஷரோன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - காஸாவிலுள்ள குடியிருப்புக்களுக்கு முன்னால் இருந்த நான்கு கட்டடங்களை இஸ்ரேலியப் படையினர் தகர்த்துள்ளதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - ஆயுதம் தாங்கிய குழுவினர் இஸ்ரேலியப் படையினரின் தாங்கி ஒன்றைத் தாக்கியதாகவும், இதனையடுத்து - இஸ்ரேலிய ஹெலிகொப்ரர் அவர்கள் மீது நடாத்திய தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தச் சம்பவத்தில் காயமடைந்த ஐவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## நேற்று முன்தினம் கடத்தப்பட்ட

# ஐந்து ஆப்கான் படையினர் சடலமாக மீட்கப்பட்டனர்!

நேற்று முன்தினம் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்ட 5 ஆப்கான் படையினர் நேற்றையதினம் ஆப்கானின் தென்பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

ஆப்கானின் சாபுல் மாகாணத்திலுள்ள ஷாஜோய் என்ற மாவட்டத்திலிருந்தே இந்த 5 படையினரும் கடத்தப்பட்டிருந்தனர்.

தலிபான் அமைப்பினரே இந்த 5 படையினரையும் கடத்தி கொலை செய்துள்ளதாக ஆப்கான் அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த 5 படையினருக்கும் வயிற்றிலும், மார்பிலும் சுடப்பட்டதாலேயே உயிரிழந்ததாக சாபுல் மாகாண ஆளுநர் மொகமட் பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்தார்.

ஆப்கானின் தென்பகுதியில் அண்மைய சில நாட்களாக தலிபான் ஆதரவாளர்களால் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமையும் இந்தப்பகுதியில் நடந்த கண்ணிவெடித் தாக்குதலில் 4 ஆப்கான் படையினர் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



அமெரிக்கா தலைமையில் தலிபானின் ஆட்சி ஆப்கானில் அகற்றப்பட்ட பின்னர், அவர்கள் பழிவாங்கும் முகமாக ஆப்கான் படையினர் மீது தாக்குதல் நடத்துவதாக ஆப்கானின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க புலிகள் நிபந்தனை விதிக்கவில்லை!

## ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிக்கை

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் நிபந்தனைகள் எதையும் விதிக்கவில்லை என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

விடுதலைப் புலிகளுடன் சந்திப்பொன்றை மேற்கொண்ட நோர்வே சமாதானத் தூதுக்குழுவினர் - சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கருத்துக்களை அந்த இயக்கத்தின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்திருந்தனர்.

இருதரப்புக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கக்கூடியதான நிலைப்பாடுகள் காணப்படுவது வரவேற்புக்குரிய விடயமென்று நோர்வே சமாதானக் குழுவினர் தெரிவித்தனர்.

நோர்வே சமாதானக் குழுவைச் சேர்ந்த எரிக் சொல்ஹெய்ம், ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோர் புலிகளுடனான சந்திப்புக் குறித்து வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு விளக்கவிருப்பதாகவும் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு விபத்தில் இரு சகோதரர்கள் பலி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாங்காடு எனுமிடத்தில் நேற்று மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - லொறி விபத்தில் இருவர் உயிரிழந்தனர்.

முனைத்தீவு - மட்டக்களப்பை நிரந்தர முகவரியாகவும், தாமரைக்கேணி மட்டக்களப்பு நகரத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் மோகன் (வயது 36), யுகபாலன் தவமணி (வயது 43) ஆகிய இரு சகோதரர்களே உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

விபத்தில் இறந்த இருவரும் தற்போது அவர்கள் வசிக்கும் தாமரைக்கேணிப் பகுதியிலிருந்து அவர்களது நிரந்தர முகவரியான முனைத தீவிலுள்ள காளிகோவிலுக்கு நேற்று சித்திரைப் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு சென்றனர்.

பின்னர் அங்கிருந்து நேற்று மாலை சுமார் 6.45 மணியளவில் மீளவும் தமது தாமரைக்கேணி வீட்டினை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவேளை- மாங்காடு எனும் பகுதியில் முன்னே வந்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்தனர்.

இவ்வாறு படுகாயமடைந்த இருவரும் அருகிலுள்ள களுவாஞ்சிக்குடி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட நிலையில் அங்கு மோகன் உயிரிழந்தார். தவமணி மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லும் வழி யில் உயிரிழந்தார்.

தற்போது மோகனின் சடலம் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையிலும், தவமணியின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலும் வைக்கப்பட்டுள்ளன.

# சமாதானப் பேச்சில் தனித்தரப்பாக முஸ்லிம்கள் பங்கேற்க வேண்டும்!

## நோர்வே தூதுக்குழுவிடம் முஸ்லிம் காங்கிரஸ் வற்புறுத்து

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களைத் தனித்தரப்பாக பங்கேற்க வழிசெய்ய வேண்டும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸினர் - நோர்வே சமாதானத் தூதுக் குழுவினருடனான சந்திப்பின் போது வலியுறுத்தினர்.

நோர்வேயின் சமாதான தூதுக்குழுவினருக்கும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுக் காலை இடம்பெற்றபோதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின் போது, நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் அக்கட்சியின் யாப்புக் குழுவினர் உள்ளிட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், நோர்வே தரப்பினருக்கும் இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் குறித்து கேட்டறிந்து கொண்டதாகவும் தெரியவருகிறது.

அத்துடன், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் மக்கள் சார்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கலந்துகொள்வது குறித்தும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. தாம் தனித் தரப்பாக பேச்சுவார்த்தையில் பங்குபற்ற வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தியது.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், இந்த விடயம் குறித்து இலங்கை அரசாங்கமே முடிவெடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# உலகவங்கி அதிகாரிகள் அம்பாறைக்கு விஜயம்

(அம்பாறை)

வடக்கு - கிழக்கு மாகாண நீர்ப்பாசன விவசாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில், நியாப் திட்டத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படவுள்ள இரண்டாம் கட்ட பாரிய வேலைத்திட்டத்தினை, பார்வையிட்டு அனுமதி வழங்குவதற்காக உலகவங்கியின் அனுமதிக்கான குழு இன்று அம்பாறை செல்கின்றது.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த 50 வருடமாக நீரில் மூழ்கி சுமார் மூவாயிரத்து 500 ஏக்கர்வரையிலான பயிர்நிலங்கள் செய்கை பண்ணப்படாமல் உள்ள கரைவாகு வடிச்சால் திட்ட விவசாயக் காணிகளை இந்தக் குழுவினர் இன்று பார்வையிடவுள்ளனர்.

இந்தத் திட்டத்தைப் பார்வையிடும் குழுவினர், இந்த விவசாயக் காணிகளில் தேங்கும் நீரை வெளியேற்றுவதற்கான செயற்திட்டத்திற்கு அனுமதி வழங்குவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று அம்பாறைக்குச் செல்லவுள்ள உலகவங்கியின் அனுமதிக்கான குழுவில் பொறியியலாளர் நிஹால் பெர்னாண்டோ, ஆர்.கே. மல்ஹோல்ரா, மாதவன், பாலச்சந்திரன், மற்றும் மனோகரன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

அம்பாறை செல்லும் இக்குழுவினர், அந்த மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் சம்மாந்துறைப் பிரதேச செயலகத்தில் இன்று நடைபெறவுள்ள கூட்டத்திலும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஐந்து மாவட்டங்களில் நியாப் தனது இரண்டாம் கட்ட வேலைகளை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(07)

# மின்சாரம் தாக்கியதில் உடுப்பிட்டியில் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டிப் பகுதியில் மின்சாரம் தாக்கி வர்த்தகர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இரத்தினம் சிவசுந்தர இரத்தினம் (வயது 42) என்ற வர்த்தகரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது -

உயிரிழந்த வர்த்தகர் நேற்று அதிகாலை குளித்துவிட்டு, ஈரத் துவாயினை மின்வயர் ஒன்றின் மீது போட்டவேளை, மின்சாரத்தினால் தாக்கப்பட்டார்.

மின்சார வயர் தேய்பட்டிருந்ததால் மின் ஒழுக்கு ஏற்பட்டு இந்தச் சம்பவம் நிகழ்ந்ததாகவும், இதையடுத்து மின்சாரத்தால் தாக்கப்பட்ட வர்த்தகர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும், அங்கு அவர் உயிரிழந்ததாகவும் தெரியவருகிறது.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் உயிரிழந்தவரின் சடலம் உறவினர்களிடம் நேற்று மாலை ஒப்படைக்கப்பட்டது. (17,202)

# மிதிவெடியில் சிக்கிய இளைஞரின் கண் பாதிப்பு

உரும்பிராய் பகுதியில் மிதிவெடியில் சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் தனது வலது கண்ணில் படுகாயமடைந்தார்.

நேற்று நண்பகல் ஒரு மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

உரும்பிராய் சந்தியிலிருந்து மருதனார்மடம் செல்லும் வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உரும்பிராயைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சஞ்சீவன் (வயது 20) என்ற குடும்பஸ்தரே தனது வலது கண்ணில் படுகாயமடைந்தவராவார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மருதனார்மடத்திற்குச் செல்லும் வீதியில் இராணுவத்தினரால் கைவிடப்பட்ட காவலரணுக்குப் பின்புறமாக இருந்த காணியைத் துப்புரவு செய்துகொண்டிருந்தபோது - அப்பகுதியில் காணப்பட்ட முட்கம்பிகளை இழுத்தபோதே மிதிவெடி வெடித்தது.

# எஸ்.பி.திஸநாயக்கா மீது வெள்ளியன்று விசாரணை!

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்காவுக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டுள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரணை செய்யவுள்ள நீதிபதிகளின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மூன்று நீதிபதிகள் கொண்ட

# நவீன மோட்டார் சைக்கிள்கள் கொழும்பில் கைப்பற்றப்பட்டன!

(கொழும்பு) -

இந்த மோட்டார் சைக்கிள்கள்

# நீரில் மூழ்கி போராளி சாவு

முல்லைக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் நீரில் மூழ்கி போராளி ஒருவர் சாவடைந்தார். லெப்டினன்ட் இலக்கியன் (அகஸ்ரின் -

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்காவுக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டுள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரணை செய்யவுள்ள நீதிபதிகளின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மூன்று நீதிபதிகள் கொண்ட குழுவுக்கு பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமை தாங்குவார். உயர் நீதிமன்ற நீதிபதிகள் ராஜா பெர்னாண்டோ, சில்வா ஆகியோர் ஏனைய இரு உறுப்பினர்களுமாவர்.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறும். அன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு எஸ்.பி.திஸநாயக்கவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(07)

போட்டவேளை, மின்சாரத்தினால் தாக்கப்பட்டது. (17,202)

# நவீன மோட்டார் சைக்கிள்கள் கொழும்பில் கைப்பற்றப்பட்டன!

(கொழும்பு)

கொழும்பு - ரம்புக்கனை பிரதேசத்தில் வைத்து நவீனரக தன்னியக்க மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக கொழும்பு மத்திய பிரிவுக்குப் பொறுப்பான விசேட புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

தன்னியக்க கருவிகளுடன் மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டது இதுவே முதற்தடவை என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மோட்டார் சைக்கிள்கள் இருநூறு மீற்றர் தூரத்தில் இருந்து தன்னியக்க கருவி மூ ம் இயக்கக்கூடியவை. இது தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரும் வாழைச்சேனை, ஏறாவூர் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

# நீரில் மூழ்கி போராளி சாவு

முல்லைக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் நீரில் மூழ்கி போராளி ஒருவர் சாவடைந்தார். லெப்டினனட் இலக்கியன் (அகஸ்ரின் - வசந்தரூபன் இல. 213 சிவசுந்தரம் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி) என்பவரே சாவடைந்தவராவார்.

இவருக்கு, தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - மருதனார்மடத்திற்குச் செல்லும் வீதியில் இராணுவத்தினரால் கைவிடப்பட்ட, காவலரணுக்குப் பின்புறமாக இருந்த காணியைத் துப்புரவு செய்துகொண்டிருந்தபோது - அப்பகுதியில் காணப்பட்ட முட்கம்பிகளை இழுத்தபோதே மிதிவெடி வெடித்தது.

இதனால், முகத்தில் படுகாயமடைந்த மேற்படி குடும்பஸ்தரின் வலது கண் பெரிதும் பாதிக்கப்பட்டு, யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

# நோர்வே சமாதானக் குழுவினரை...

இதன்போது இலங்கை அரசாங்கம் வெறுமனே வெளிநாட்டு நிதிகளைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டு, பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கக் கூடாது என்ற கருத்தையும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் வலியுறுத்தினர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கமுன்னர் இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எரிக் சொல்ஹெய்முக்கு வலியுறுத்தினர்.

சந்திரிகா அரசு தனது கட்சிக்கான பெரும்பான்மையை நாடாளுமன்றில் நிரூபிப்பதை நோக்கமாகவும் சர்வதேச உதவிகளைப் பெறும் நோககாகவும் கொண்டு சமாதான முயற்சியை முன்னெடுக்காமல் அர்த்தமுள்ளதாக முன்னெடுக்கவேண்டும்.

சமாதானப் பேச்சுக்களை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டுமே நடத்தவேண்டும். சமாதானப் பேச்சுக்கள் மூலம் உள்ளக சுயநிர்ணய உரிமைகளுடன் கூடிய சுயாட்சி தமிழீழ விடுதலைப்புலிகளிடம் கையளிக்கவேண்டும்.

நடைபெறுகின்ற சமாதானப் பேச்சுக்களில் படையினர் மேற்கொண்ட போர் நடவடிக்கை காரணமாக பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் பயன்பெறவேண்டிய விடயங்கள் குறித்தும் தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நோர்வே சிறப்புத் தூதுவரிடம் வலியுறுத்தினர்.

இதற்கு பதிலளித்த நோர்வேத் தூதுக்குழுவினர் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் அதிக அக்கறை கொண்டிருப்பதால், விரைவில் பேச்சுக்களை ஆரம்பிக்கமுடியும் என, நம்பிக்கை வெளியிட்டனர். (01)


தென்மராட்சியில்

கணனி விற்பனை, சேவை நிலைய ஆரம்பம்

easyPC System

Computer Sales and Service Centre



இன்று முதல் சாவகச்சேரி நகரில்

எமது கணனி விற்பனை மற்றும் சேவை நிலையம் ஆரம்பமாகின்றது.

உங்களுக்கான எமது சேவைகள் :

- கணனி, கணனி உதிரிகள் வழங்கல்
- கணனி அச்சுப் பதிப்பிற்கான Toner, Ribbon, Cartridge, Refill Kit
- கணனி வலைப்பின்னல் உருவாக்கம்
- கணனி திருத்தச் சேவைகளும் பராமரிப்புக்களும்

212, Kandy Road,
Chavakachcheri.

Telephone : 077 - 7229919

(727)



இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.05.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.